


25வது பட்டம் ஜீயர் ஸ்வாமிகள்

SRI:






## SRI THIRUVIKARAMA SWAMYDEVASTHANAM

Thirukovalur – 605 757, Villupuram Dt.

Sri Emberumanar Jeeyar Madathipathi
SRI SRINIVASA RAMANUJACHARIYAR
Hereditary Trustee

கள்ளக்குறிச்சி நகரம் கீர்த்திமூர்த்தி ஏகேஆர் தேவராஜுலு செட்டியார் ஸ்ரீமதி வீரலக்ஷ்மி அம்மாள் திருக்குமாரர் ஸ்ரீவைணவ ஸ்ரீமான் ஏ.கே.ஆர்.டி. வேங்கடசுப்பிரமணிய செட்டியார் ஸ்ரீமதி வி.எஸ். கலாவதி தம்பதியருக்கு சஷ்டியப்தபூர்த்தி சாந்தி சுபமுகூர்த்தம் ஸ்ரீவைணவ முறைப்படி பாராயண ஹோமங்கள் முதலியன ஸகல சிறப்பான வைபவங்களுடம் நடைபெறுவது பரம ஆனந்தமாகும். பகவத் பாகவத ஆசார்ய பக்தி நிறைந்தவர்கள். இவ்வைபவத்தில் திருச்சித்ரகூடம் முனைவர் ஸ்ரீ ஏ.வி. ரங்காச்சாரிய ஸ்வாமிகள் நற்றமிழால் நூல் செய்து என்கிற வகையில் திருக்கோவலூர் ஸ்ரீமத் எம்பெருமானார் ஜீயர் ஸ்வாமிகள் வைபவம் மடத்தின் வரலாறு ஆகிய பல விஷயங்களை உள்ளடக்கி உள்ளார்கள். இந்நூல் வெளியீட்டு விழாவும் நடைபெறுகிறது. தமது கைங்கர்யமாகச் செட்டியார் வெயிட்டு ஸ்ரீவைணவ உலகம் தெரிந்து கொள்ளும்படி அறிய வேண்டும் அர்த்தமெல்லாம் இதுக்குள்ளே உண்டு என்கிறாப்போலே மடத்து திருவடி சம்பந்திகள் இந்நூலை வாங்கிப் படித்து தெரிந்து கொள்ளும்படியான சிறப்பான நூலாகும். ஸ்ரீமான் செட்டியார் தம்பதிகள், மற்றும் குடும்பத்தினர் ஸ்ரீபூங்கோவலாயன் கிருபாகடாக்ஷத்தாலும் ஆசாரிய கடாக்ஷத்தாலும் நீங்காத செல்வம் நிறைந்திருக்கும்படியாக மங்களாஸாசனம் செய்கிறோம்.

பொலிக! பொலிக! பொலிக!

ஸ்ரீநிவாசராமானுஜாசாரியார்

கொண்டவர்கள், செல்வமும், கல்வியும், செல்வாக்கும் ஒருங்கே திகழ்ந்துள்ளபோதும் பெருமையும் பெருமிதமும் கொள்ளாது, மிகவும் அடக்கமாக, நிறைகுடமாக வாழ்கிறார்கள்.

"செய்க பொருளை" என்ற வள்ளுவர் கூற்றுப்படி ஸ்வர்ண மஹால் அணி வணிகத்தையும் "கல்வியே அழியாத செல்வம்" என்பதை உணர்ந்து முருகா தொழில் நுட்பக் கல்லூரியில் செயலாளராகவும், பகவத் பாகவத கைங்கர்யத்திற்கு ஸ்ரீவாரி டிரஸ்டையும் இயக்கி வருகிறார்கள். உள்ளத்தில் கனிவும், தளராத உழைப்பும், சமுதாயத்தில் மதிப்பும் கற்றோரிடம் மரியாதையும், தொழிலில் முனைப்பும் கொண்டு சிறந்து விளங்கிவரும் செட்டியார் அவர்களின் மணிவிழா தமது ஆசார்யரான ஸ்ரீமத் எம்பெருமானார் ஜீயர் ஸ்வாமியின் தலைமையில் பரம விலட்சணமாக நடைபெறுவது வைணவ உலகம் பெற்ற பாக்யமாகும். ஸ்ரீமாந் செட்டியார் தம்பதிகள் அரோக திடகாத்ரமுடன் சீரும் சிறப்புமாக வாழ்ந்து, பீமரத சாந்தி, சதாபிஷேகம், கனகாபிஷேகம், நூற்றாண்டு விழா ஆகிய அனைத்தையும் வைணவ விழாவாகக் கொண்டாடும்படி அருள் ஸ்ரீபுண்டரிக வல்லித் தாயார் ஸ்ரீ தில்லை கோவிந்தராஜப் பெருமாள் திருவடிகளில் ப்ரார்த்திக்கிறேன்.

ஸ்ரீமான் செட்டியார் அவர்கள் மிகுந்த ஆசார்ய பக்தியை உடையவர்கள். அதற்குக் காரணம் தென்னாட்டிலே மிகச் சிறந்து விளங்கும் திருக்கோவலூர் ஸ்ரீமத் எம்பெருமானார் ஸ்வாமிகளின் சீரிய வைபவமே ஆகும். முதலாழ்வார் காலத்திலிருந்தே வைணவத் தலைநகராகத் திகழ்ந்து, வைணவம் வளர்க்கும் ராஜதானியாக விளங்கி வருவது திருக்கோவலூர் எம்பெருமானார் ஜீயர் மடமே ஆகும். இந்த மடத்தின் ஆசார்ய பீடம் ராமாநுஜர் நியமித்த எழுபத்துநான்கு ஆசார்ய பீடங்களில் ஒன்பதாவதாக ஏற்படுத்தப் பட்டது. அது முதற்கொண்டு இந்த மடம் வைணவப் பயிரை நன்கு வளர்த்து வருகிறது. இந்த மடத்து ஜீயர் சுவாமிகள் சிஷ்யர்களிடத்தே பேரன்பும், அருளும், வாத்ஸல்யமும் நிறைந்தவர்கள். ஸத்ஸம்பிரதாய ஞானாநுஷ்டரான பீடத்தின் வைபவத்தை இம்மடத்தின் சீடர்கள் அனைவரும் அறிந்தது யதிராசர் இன்னருளுக்கு என்றும் இலக்காகி சதிராக வாழ வேண்டும் என்ற பரந்த உள்ளத்தால், தம் மணிவிழாவின் அங்கமாக திருக்கோவலூர் ஸ்ரீமத் எம்பெருமானார் ஜீயர் வைபவம் என்ற இந் நூலை காணிக்கையாகத் தமது ஆசார்யரிடம் ஸமர்ப்பிக்கிறார்கள். இந்நூல் புதுவை ஸ்ரீமாந் ஸ்ரீதுரைரங்க ராமானுஜதாஸர் அவர்களால் 1958ல் வெளியிடப்பட்ட நூலை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டது. இந்நூலை மடத்து சீடர்களும் அனைவரும் படித்துத் தெளிந்து ஆசார்ய பக்திமிகுந்து இன்புற்று வாழ ப்ரார்த்திக்கிறேன்.

திருச்சித்ரகூடம் **ஏ.வி. ரங்காசாரி**

ஸ்ரீ:



ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# திருக்கோவலூர் தல வைபவம்

ஸ்ரீயப்பதியான ஸர்வேச்வரன் இருள் தருமாஞாலமான இந்நில உலகினில், மாறிமாறிப் பலபிறப்பும் பிறந்துபோகும் ஜீவர்களை தம்மையே நாளும் வணங்கித் தொழுவார்க்கு தம்மையே ஒக்க அருள் செய்வான் ஒருவன் ஆகையாலே முதலில் ராமக்ருஷ்ணாதி அநேக அவதாரங்களைச் செய்து, நல்வழிப்படுத்த முயன்றான். அது ஒருவாறு பலித்தது என்றாலும், அவதாரப்ரயோஜனம் பெறாதவர்கள் அதிகமாக நிற்கக் கண்டு, அதனால் வருந்தின அவன் பரமசேதனனான தன்னுடைய அடிக்கழஞ்சு பெறும் என்று எண்ணி, ஆட்கொள்ள எண்ணி, அதிலும், அணுகி நிற்பாரன்றி, அகல நிற்பார் காணக்கண்டு, மூன்றாம் முறையாக, மூதுவர்களாயும், அதனாலேயே தனக்கு உத்தேச்யர்களான அனந்த, கருட விஷ்வக் சேனாதிகளான நித்யசூரிகளை, ஆழ்வார்களாக அவதரிப்பிக்கச் செய்து, அவர்கள் கார்யம் பலித்தபோது, தான் முகம் காட்டுகைக்காக, தன்னுடைய பரத்வ, வ்யூக, விபவ, அந்தர்யாமித்வாதிகளை விட்டு, எய்துமவர்க்கிந்நிலத்தில் அர்ச்சாவதாரம் எளிது என்றபடி, அர்ச்சாரூபியாய் கோயில், திருமலை, பெருமாள் கோயில், திருநாராயணபுரம் என்ற புஷ்ப, த்யாக, போகமண்டபங்களான பலபல பதிகளில் கோயில் கொண்டு எழுந்தருளி, அனைவரையும் வாழ்விக்கலானான்.

அவ்வப்பதிகள் 108ல் நடுநாட்டுத் திருப்பதிகள் இரண்டினில் முதலானதும், மிக்க பெருமை வாய்ததுமான (பஞ்ச) க்ருஷ்ணாரண்ய க்ஷேத்திரங்கள் 5ல் தலையாயதும், "க்ருஷ்ண க்ஷேத்ரே மஹாபுண்யே க்ருஷ்ணமக்லிஷ்ட காரணம் ஆராத்ய நித்ய ஸம்ப்ராம்ப்த த்விசப்ததி சதுர்முக:" என்றபடி 72 ப்ரம்மாக்களால் ஆராதிக்கப்பட்டதும், இந்த க்ஷேத்திரத்தில் க்ருஷ்ணனுடைய வைபவம் அறிந்த விஷ்ணு துர்க்கை விந்த்ய மலையிலிருந்து வந்து, எம்பெருமானுக்குக் காவல் பூண்ட ப்ரஸித்தி பெற்றதும், உலகளந்த பெருமாளின் ஸேவையைக் கண்டுகளிக்க,

முன்பொருகால் பெண்ணைத்தென்பால் ஆச்ரமம் அமைத்து, இங்கு கோயில் கொண்டுள்ள ஆயனைக்குறித்து, தவம் புரிந்த மிருகண்டு முனிவருக்கு, திருவிக்ரம நாராயணனாய், வலது திருவடியை உயரத் தூக்கியும், இடது திருவடியை பூமியிலும், லக்ஷ்மி, வைஜயந்திவனமாலை இயங்க ஸ்ரீகர விமானத்தில் ஸேவை ஸாதித்த க்ரமத்தில், பாவருந்தமிழால் பேர் பெறுபனுவல் பாவலர் பாதி நாள் இரவில் மூவரும் நெருக்கி, மொழி விளக்கேற்றி, வையம் தகளியா, அன்பே தகளியா, திருக்கண்டேன் என்று மாமலராள் தன்னோடும் ஆயனைக் கண்டமை காட்டும் முதலாழ்வார்கள். மற்றுள்ள ஆழ்வார்களுக்கு முன்னே வந்துதித்து, நற்றமிழால் நூல் செய்து நாட்டை உயாத்த பெற்றிமையோர் திருவாயிலாக அருளிச் செயல் அவதரித்த ஏற்றமுடைய அருளிச் செயல் அவதார ஸ்தலமாகவும், "காமர் பூங்கோவல் இடைகழியே பற்றி நீயும் திருமகளும் நின்றாயால்" என்று பொய்கை ஆழ்வாராலும், "கோவல் எந்தைக்கு இடம்" என்று பூதத்தாழ்வாராலும், "என் ஆழிவண்ணன் பால் திருக்கண்டேன்" என்று பேயாழ்வாராலும், கிளரொளி "மணிமுடி எங்கோவலன்" என்று நம்மாழ்வாராலும், "ஓங்கி உலகளந்த உத்தமன்" என்று ஆண்டாளாலும், திருமந்த்ர ப்ரதிபாத்யமான அடியார் வைபவத்தை அச்சாவதாரத்தில் அடியார் குழாங்களான அன்பு கூறும் அடியவர்களுடன் கூடி அனுபவித்த பெருமாள் இவரே என்று அத்யவஸித்த திருமந்தரார்ந்த நிஷ்டரான திருமங்கையாழ்வார் திவ்யதேச மங்களாசாஸனம் பண்ணும்போது பதிகள்தோறும் இவரையே தான் கண்டதை "கோவல் நகல் நடந்தார்க்கு இடமாமலையாவது நீர்மலையே" என்று ஆதியில் திருநீர் மலையிலும், "கோவல் உலகளப்பான் அடிநிமிர்ந்த அந்தணனை யான் கண்டது அணிநீர்த்தென் அரங்கத்தே" என்று திருவரங்கத்திலும், "கோவல் நின்றான் நாமம் நமோ நாராயணமே" என்று திருநரையூரிலும், "கோவல் இடைக்கழி மைந்தனைச் சென்று நாடி கண்ணமங்கையுள் கண்டு கொண்டேன்" என்று திருக்கண்ணமங்கையிலும், இவ்வாறு எங்கும் கண்ட ஆயனாரை "செஞ்சாலி விளைவயனுள் திகழ்ந்து தோன்றும் திருக்கோவலூர்", "தீங்கரும்பு கண்வளரும் கழனி சூழ்ந்த திருக்கோவலூர், தென்றல் வீசும் திருக்கோவலூர் என்று பொழில் அழகும், செறி ஆர்ந்த மணிமாடம் திகழ்ந்து தோன்றும் திருக்கோவலூர் என்று எழிலழகும், சோமுச்செய்யும் மறையாளர் நிறைந்த செல்வத் திருக்கோவலூர் என்று பாகவத ஆச்சார்ய ஸம்ருத்தியையுடைய திருக்கோவலூர் அதனுள், தூவடியில் பார்மகள்



பூமங்கையோடு, சுடராழி சங்கிருபால் பொலிந்து தோன்ற, காவடியில் கற்பகமே போல நின்று கலந்தவர்கட்கு அருள்புரியும் கருத்தினானைக் கண்டேன் நானே என்று ஒருகால் கூறி நிற்காமல் ஒன்பதின்கால் கூறி, "என் இடைகழி மைந்தனை அன்பனை அன்றி ஆதரியேனே" என்று தமது அத்யவஸாயத்தைக் கூறி, "சிறிய திருமடலில் சீரார் திருவேங்கடமே திருக்கோவலூரே" என்று ஒரு கோர்வையாக அனுபவித்தும், ஆர்த்தி அடங்காமல் பெரிய திருமடலில், "முன் இவ்வுலகுண்ட மூர்த்தியை, கோவலுள் மன்னும் இடைக்கழி எம்மாயவனை" என்று மடலூர்ந்தும், சரம ப்ரபந்தமான திருநெடுந்தாண்டகத்தில் "மண் முழுதும் அகப்படுத்து, நின்ற எந்தை மலர் புறையும் திருவடியே வணங்கினேனே" என்றும் "அலம்புரிந்த நெடுந்தடக்கை அமரர் வேந்தன் தான் உகந்த ஊர்" "பொன் விளங்கும் பொய்கை வேலி பூங்கோவலூர்" என்றும், "கற்புடைய மடக்கன்னிக் காவல் பூண்ட கடிபொழில் சூழ் நெடுமறுகில் கமல வேலி, பொற்புடைய மலையரயன் பணிய நின்ற பூங்கோவலூர் தொழுதும்போது நெஞ்சே" என்று நெஞ்சை அனுபவிக்கச் சொல்லியும், இறுதியில், "உலகம் மூன்றினையும் திரிந்து ஓர் தேரால் வரை உருவின் மாகளிற்றை என்னிலங்கம் எல்லாம் வந்து இன்பமெய்த எப்பொழுதும் நினைந்துருகி இருப்பன் நானே" என்று திருக்கோவலூர் ஆயனாரே தமக்கு எல்லாமாக அறுதியிட்டுள்ளார்.

இவ்வாறு, முதலாழ்வார்களையும், திருமழிசைபிரான், மாறன், சேரலர்கோன், பட்டநாதன் அன்பர்தாள்தூளி நற்பாணன் ஆகிய அனைவரையும் கடாக்ஷித்தும், கலியனுக்கு பிள்ளைச் சேவகம் தொடங்கி, ஸேவை ஸாதித்த வைபவத்தையுடைய ஆயனார் திருக்கோவில் பல்லவ மன்னர்களாலும், விஜயநகர அரசர்களாலும், ஸ்ரீமத் எம்பெருமானார் ஜீயர் ஸ்வாமிகளாலும் கட்டிக் காக்கப் பட்டுள்ளது.

இந்த க்ஷேத்திரம் நடு நாடு என்று பெயர்பெற்று பல அரசர்களால் ஆளப்பட்டு வந்திருக்கிறது. 2000 ஆண்டுகளுக்கு முன்பே பல்லவ அரசர்களால் இவ்வூர் கோயில்களும், கோபுரங்களும் கட்டப்பட்டிருக்கின்றது என்று கோயில் கல்வெட்டுகளால் தெரிய வருகிறது. இந்த க்ஷேத்திரம் புராண காலத்தில் பஞ்சகிருஷ்ணாரண்ய க்ஷேத்திரம் என்று வழங்கும் ஐந்து க்ஷேத்திரங்களில் ஒன்று என்பதாக பிரம்ம புராணம் கூறுகிறது.

இவ்வாறுமுதலாழ்வார்கள் மூவரும் மொழி விளக்கேற்றி முகுந்தனைத் தொழுத முதல் திவ்யதேசம் என்பது இந்த க்ஷேத்திரத்தின் மிகப் பெருமையாகும். பின்பு திருமங்கை யாழ்வாரும் இந்த க்ஷேத்திரத்தையடைந்து தம் பாசுரங்களினால் மங்களாசாஸனம் செய்தருளினார். இந்த க்ஷேத்திராதிபதி கண்ணனுடைய வைபவத்தை அறிந்து ஸ்ரீ துர்க்கை விந்திய மலையிலிருந்து வந்து இந்த எம்பெருமானுக்கு ரக்ஷகியாக எப்போதும் இருந்து வருகிறாள். இங்குள்ள ஸ்ரீ துர்க்கை மிக வரப்ராஸாதி. பக்தர்களின் விருப்பத்தைப் பூர்த்தி செய்து வருகிறாள்.

திருமங்கையாழ்வாரும் தம்முடைய பாசுரத்தில் "கற்புடைய மடக்கன்னிக் காவல் பூண்ட என்று இந்த துர்க்கையைப் பாடுகிறார், ஆச்சார்யர்களும் `தம்பி வளைக்காரி' என்று போற்றுகிறார்கள்.

பரசுராமர் இங்கு தவம் செய்ததாகப் புராணமும், அகத்தியர் இங்கு தவமியற்றியதாக தமிழிலக்கியங்களும் அறிவிக்கின்றன. அர்ஜுனன் தீர்த்த யாத்திரையின்போது திருக்கோவலூருக்கு வந்து தென் பெண்ணையாற்றில் நீராடி பெருமாளை வழிபட்டதாக வில்லிபாரதம் தெரிவிக்கிறது.

மலையமான் திருமுடிக்காரி என்ற அரசர் கடையெழு வள்ளல்களில் ஒருவர். அம்மன்னர் ஆண்ட ஊர் திருக்கோவலூர் என்பர். அகநானூறு பாடல்களில் திருக்கோவலூர் மற்றும் பெண்ணையாறு பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. மலையமானுக்குச் சொந்தமான இடம் திருக்கோவலூருக்கு அருகில் இருந்ததாகவும், அவ்விடத்தின் பெயர் முள்ளூர்க்கானம் என்றும் குறுந்தொகை கூறுகின்றது. இதனால் மலையமான் முள்ளூர் பொருநன் என்ற சிறப்புப் பெயரையும் பெற்றிருந்தான் என்றும் கூறுவர். புறநானூற்றில் அதியமான் நெடுமான் அஞ்சி முற்றுகையிட்டு திருக்கோவலூரை வென்றான் என்று கூறப்படுகின்றது.

கடையெழு வள்ளல்களில் ஒருவரான பாரிவள்ளல் இறந்தபின், கபிலர் அவர் புதல்விகள் அங்கவையையும், சங்கவையும், தம்முயற்சியால் தெய்வீகன் என்ற மன்னருக்கு மணம் செய்து வைத்தார். அம்மன்னர் ஆண்ட ஊரே திருக்கோவலூரில் உள்ள பாறை ஒன்றின்மீது தீ வளர்த்து, அதில் விழுந்து முக்தி அடைந்தார் என்றும் அப்பாறையே இன்று கபிலக்கல் என்று அழைக்கப்படுகிறது என்றும் தெரிய வருகிறது.



பழையனூர் நீலிப் பேலியானது பழி வாங்கும் வஞ்சக நோக்குடன் செட்டியைத் தொடர்ந்து வந்து, அழுது, நடித்து, வடித்த நீலிக் கண்ணீரைக் கண்டு நம்பிய நாற்பத்தொன்பது நிதிபதிகள் செட்டிக்கு அநீதியாக வழங்கிய தீர்ப்பின் குற்றத்திற்காக தீ வளர்த்து, அதில் தங்கள் உயிரை மாய்த்துக் கொண்ட திருத்தலம் இத்தலம் என்றும் வழங்கப்படுகிறது. நீதியைக் காக்கும் நீதிபதிகளே தாங்கள் நீதியில் இருந்து வழுவிய குற்றத்திற்காக தங்களைத் தாங்களே தண்டித்துக் கொண்ட பெருமையைப் பெற்ற ஊரே திருக்கோவலூர் என்று கூறப்படுகிறது.

திருக்கோவலூர் திவ்யதேசம் நீர்வளம், நிலவளம் மிக்கது. அங்கு வேதமும், வேள்வியும் நடைபெறுகின்றன. அதன் காரணமாக திருமகள், நாமகள், துர்க்கை ஆகியோர் நித்யவாஸம் செய்கிறன்றனர். விளைவயல்கள் திகழ்ந்து தோன்றும் திருக்கோவலூர், சோலைத் திருக்கோவலூர், சீரணங்கு மறையாளர் நிறைந்த செல்வத் திருக்கோவலூர், மணிமாடம் திகழ்ந்து தோன்றும் திருக்கோவலூரில் எம்பெருமானைக் கண்டேன் என்கிறார் திருமங்கையாழ்வார்.

இவ்வாறு வளம் மிக்க இவ்வூரில் ஆத்ம குணங்கள் நிறையப் பெற்ற அந்தணர்கள் வாழ்கின்றனர். இவர்கள் நெருப்பின் நிறமுடைய சிவனையும், பிரமனையும் ஒத்தவர்கள், காளை வாகனம் உடைய சிவனும், குபேரனும், இந்திரனும் பிரமனும் சேர்ந்திருக்கும் ஊர்போல மிகுந்த குணம் உடைய அந்தணர்கள் நிறைந்துள்ளனர். அவர்கள் பயனை எதிர்பாராது நான்கு வேதங்களை ஓதுகின்றார்கள். ஸோம யாகம் செய்கிறார்கள். ஏழிசை, ஆறு அங்கம், ஐந்து வேள்வி, நான்கு வேதம், முத்தீ இவற்றால் இரவு பகலாகிய இருபொழுதும் மனம் ஒன்றித் திருமாலை வழிபடுகின்றனர்.

இவ்வூரில் அந்தணர்கள் வீடுகளிலும் மண்டபங்களிலும் சாவடிகளிலும் வேதம் ஓதி, உருச் செய்யும் போது, நீர் அகழி அருகே உள்ள சோலையிலிருந்து வீசும் தென்றல் அவர்கள் மீது பட்டு குளுமையை உண்டாக்குகிறது.

இப்படிப்பட்ட சூழ்நிலையை விரும்பி, இத்திவ்ய தேசத்தில் மணம் வீசும் தாமரையில் தோன்றிய திருமகள், நாமகள், மான் வாகனம் கொண்ட துர்க்கை ஆகிய மூவருடன் செறி ஆர்ந்த மணிமாடங்களைக் கொண்ட செல்வத் திருக்கோவலூரில் ப்ரளயத்தின்போது தன் வயிற்றில் உலகத்தை வைத்துக் காத்தவனும், பாற்கடலில் பள்ளி கொண்டவனும், கஜேந்திர வரதனையும், கருடன் மீது ஏறி, மாலி, சுமாலி முதலிய அரக்கர்களை அழித்து, பக்தர்களுக்கு அருளிய அருளாளனையும், கபந்தன், வாலி, இராவணன் ஆகியோரை அழித்த இராமபிரானையும், உறியில் இருந்த மணம் மிக்க வெண்ணையைத் திருடித் தின்ற கண்ணனை யசோதை உரலுடன் கட்டியபோது கட்டுண்ணப் பண்ணியவனும், குவளையாபீடத்தை அழித்தவன், கேசியின் வாயைப் பிளந்தவன், ஏழு எருதுகளை வென்றவன், மருதமரம் சாய்த்தவன், சகடாசுரனை உதைத்தவன், மல்லரைப் போரிட்டு அழித்தவன், கம்சனுக்கு நஞ்சானவன், பாரதப் போரிலே தூது போனவன், அர்ச்சுனனுக்குத் தேர்ப்பாகன் ஆகி, எதிரிகளை அழித்தவன், பூமிதேவியும் திருமகளும் கூடி இருக்க, சக்கரம் சங்கு விளங்க எழுந்தருளுபவன், நெய்தல் பூ, மரகதம், மேகம் ஆகியவற்றின் நிறம் உடைய அழகனை திருக்கோவலூரிலேயே நான் கண்டேன் என்று அவதாரச் சிறப்புகளை அர்ச்சாவதாரத்திலேயே மதில்களால் நிறைந்த திருக்கோவலூரிலே கண்டேன் என்று களித்துப் பேசுகிறார்.

பாத்ம புராணம் க்ஷேத்ர கண்டம் திருக்கோவலூரில் ப்ரம்மா, பல முனிவர்களுடன் வந்து தங்கி பெருமாள் ஸேவை செய்து ஆராதித்து வந்ததாகவும் உதத்யர் முதலிய தேவ ரிஷிகள், குக்ஷி என்னும் முனிவர், மஹா தபஸ்வியான காலவர், குசத்வஜன் என்னும் அரசன் மற்றும் பல முனிவர்களும் யோகிகளும் இங்கேயே நித்தியவாசம் செய்து பெருமாளுக்கு திருவாராதனம், புஷ்ப கைங்கர்யம் ப்ரம்ம உத்ஸவம் முதலி ய உத்ஸவங்களை நடத்தி வந்ததாகத் தெரிவிக்கிறது.

திருமங்கை மன்னன் காலத்தில் பழம்பெரும் ஸ்ரீவைஷ்ணவ திவ்யதேசமான இத்தலத்தில் மிக உயர்ந்த ஸ்ரீவைஷ்ணவர்களும் ஆசார்யர்களும் நித்ய வாசம் செய்து பெருமாளுக்கு கைங்கர்யம் செய்து வந்ததை நேரில் கண்டார் திருமங்கை ஆழ்வார். இங்குள்ள தூய



நான்மறைகளைக் கற்றுவல்ல ஸ்ரீவைஷ்ணவ ஆசாரியர் தலைமையில் பல ஸ்ரீவைஷ்ணவர்கள் தங்களுடைய ஆச்ரமத்திற்கு உசிதமான பகவதாராதனங்களான கர்மாக்களை, ஒரு பலனையும் (குறிக்கோளாக்கிக்) கொள்ளாமல் தாங்கள் செய்ய வேண்டிய கைங்கர்யமாக ஸோமயாகம் முதலிய யாக தர்மங்களை பகவத் ஸமாராதனமாக எண்ணிச் செய்கிறவர்கள், மற்றும் பலர், ஸமாராதனங்களையும், ஆறு அங்கங்களையும் பஞ்சமஹா யஜ்ஞங்களையும், மூன்று அக்னிகளையும் கொண்டு எம்பெருமானை அடிபணிந்து, நான்கு வேதங்களை இரவும் பகலும் இடைவிடாது அனுஸந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு திருமாளிகையிலும் ஆசாரியர்களும் சிஷ்யர்களும் வேதங்களைச் சொல்லுவதால், ஊர் எங்கும் வேத ஒலி மிகுந்து புகழ் பரப்புவதையும், வீதிகளிலேயுள்ள அழகிய மண்டபங்களில் வேதவிற்பன்னர்கள் அனைவரும், ஆசாரியர் முன்னிலையில் வேதத்தின் ஒரு அனுவாகத்தின் அடியையோ, அல்லது பஞ்சாதியின் அடியையோ ஒருவர் எடுத்துக் கொடுத்து பதபாடம் சொல் என்றால் மயங்காமல் ஏற்றக் குறைவின்றி இருநூற்று ஐம்பது பதங்கள் சொல்வதாக வட்டக்கிடை சொல்லுகிறார்கள் (வட்டக்கிடை - ஓதின இடத்தைச் சொல்லுவது). மேலும் வாரம் ஓதுவது என்ற பரிணதையும் சொல்லுகிறார்கள். இப்படியாக திருக்கோவலூரில் எல்லோரும் லக்ஷ்மி கடாட்சம் பெற்ற செல்வந்தர்களாகவும், நாமங்கையான சரஸ்வதி கடாட்சம் பெற்ற வித்வான்களாகவும் நிறைந்ருக்கிறார்கள். இவர்கள் எல்லோருக்குமான ஸ்தல ஆசாரியர் வாஸம் செய்யும் திருமாளிகை நெருக்கம் பொருந்திய ரத்னமயமான மாடங்களால் விளங்குகிறது. (எம்பெருமாள் எழுந்தருளியிருக்கும் மாளிகை துவளில் மணிமாடம் என்றும், அடியார் திருமாளிகை தூமணி மாடம் என்றும் ஆச்சாரியர் திருமாளிகை செறியார்ந்த நெடுமாடம் என்பதும் ஆழ்வார்களின் அனுபவம்). இதனைப் பார்க்கும்போது சிவனும், குபேரனும், தேவேந்திரனும், பிரம்னும் நித்ய வாசம் செய்யும் வான் உலகத்து ஸ்தானங்களைப் போன்று திருக்கோவலூரும் பரம வைதிகர்களான ஆசார்யர்கள் நிறைந்துள்ளதும், ஆத்ம குணங்களை உடையவர்களைக் கண்டு இவர்களுக்கு நாம் சீடர்களாக அடிமைப்படக்கடவோம், இவ்வாறு அனைவரும் ஆசைப்படக் கூடிய மறையாளர்களான ஸ்ரீவைஷ்ணவர்கள் இவ்வூரில் நிறைந்துள்ளனர் என்பதை படம் பிடித்துக் காட்டியுள்ளார்.

நாதமுனிகள் தம்முடைய மருமக்களான கீழை- யகத்தாழ்வாரையும் மேலையகத்தாழ்வாரையும் அழைத்து, ஆழ்வார் நம்மை விசேஷ கடாக்ஷம் பண்ணியருளி ப்ரஸாதித்தருளின இத்திவ்ய பிரபந்தங்களை இயலுமிசையுமாக்க வேணும். அது செய்யுமிடத்து, இன்கவிபாடும் பரமகவிகள் அருளிச் செய்ததாய், செஞ்சொல்லால் எடுத்த தெய்வ நன்மாலையான திவ்ய ப்ரபந்தங்களாகையாலே இத்தை திவ்ய கானத்திலே சேர்த்துப் பாட வேணும் என்று அவர்களையும் கூட்டிக் கொண்டு, ஸ்ரீ வேதவ்யாச பகவான் வேதங்களை உதாத்த அநுதாத்த ஸ்வரித ப்ரச்யுக்தங்களாக உச்சரிக்கலாம்படி பண்ணினாற்போலே நாதமுனிகளும் இத்திவ்யப்ரபந்தங்களை திவ்ய கானத்திலே அடைத்து இயலுமிசையும் ஆக்கி தம்மருமக்களோடு திவ்ய தேசம் எங்கும் பரப்பச் சென்றபோது, திருக்கோவலூரில் வாழ்ந்து வந்த ஸ்ரீவைணவ வித்வான்களும், நான்மறையாளர்களும், ஆசார்யர்களும் இவர்களை வரவேற்று, ஆயனார் முன்பு, முன்பு முதலாழ்வார்கள் அந்தாதி பாடியது போல நாதமுனிகள், கீழையகத்தார், மேலையகத்தார் ஆகியரோடும் பண்ணிசையோடு நாலாயிரம் முழுவதையும் திருச்செவிசாய்த்து உகந்த ஆயனார், இவர்களுக்கு தகுந்த வரிசைகளை ஸாதிக்கச் செய்து மகிழ்ந்ததாக அறியப்படுகிறது.

ஆளவந்தார் காஞ்சீபுரத்தில் யாதவ பிரகாசனிடம் அத்வைதம் வாசிக்கும் இளையாழ்வாரைக் காணச் சென்றபோது பயணகதியில் திருக்கோவலூருக்குச் சென்று, ஆழ்வார்களையும் ஆயனாரைத் திருவடி தொழுதபோது அங்குள்ள ஸ்ரீ வைஷ்ணவர்களும் ஆசார்யர்களும் வித்வான்களும் திவ்யதேசத்தையும் வைஷ்ணவத்தையும் வளர்ப்பதைக் கண்டு ஆளவந்தார் மகிழ்ந்ததாக வரலாறு.

## 2. ஸ்ரீமத் எம்பெருமானார் ஜீயர் வரலாறு

ஸ்ரீராமாநுஜர் ஸ்ரீரங்கத்தில் தர்சன நிர்வாகம் பண்ணியருளும் காலத்தில் அவர் திருவடிகளிலே ஆச்ரயித்த 178 முதலிகளில் பத்தொன்பதாவது ஸ்தானத்தில்இருந்தவர் திருக்கோவலூர் ஆழ்வதான் என்ற சுவாமி - இவரே பின்பு எம்பெருமானார் திருவடிகளில் ஆச்சரயித்த 74 ஸிம்ஹாஸனாதிபதிகளில் 9வது ஆச்சார்ய ஸ்தானத்தில் இருந்து, திருக்கோவலூர் ஸந்நிதி, மற்றும் தர்சன நிர்வாகங்களைச் செய்து, ப்ரஸித்த ஆசார்ய பீடமாக விளங்கினார். திருக்கோவலூர் திருக்கோயிலுள்ள கல்வெட்டு இக்கோயிலை நிர்வாகம் செய்து வந்த திருக்கோவலூர் ஆழ்வான் திருமாளிகை மடத்தைச் சேர்ந்த அடியார்களுக்கு உணவு அளிக்க ஒரு வேலி நிலம் விலைக்கு வாங்கப்பட்டதாகத் தெரிவிக்கிறது. அதன்பின் ஏற்பட்ட பெரும் கலவரத்தில் பல மடங்கள் இடிக்கப்பட்டன. அதிலே திருக்கோவலூர் மடமும் ஒன்று. ஸந்நிதிக்கும் ஆபத்து ஏற்பட்டது. அதன் காரணமாக ஸந்நதித் தெருவில் வசித்து வந்த வைணவப் பெருமக்கள் சந்நிதித் தெருவை விட்டுவிட்டு வெளியில் புதிய வீடுகளில் குடியேறியதாக இக்கோயிலில் உள்ள ஒரு கல்வெட்டு தெரிவிக்கிறது. அதன்பின் அவர்கள் திருவரங்கத்தில் அப்போது சிறந்த அறிஞரும், செல்வாக்குடன் விளங்கிய ஸ்ரீமத் வேதவ்யாச பட்டர் ஸ்வாமியை எழுந்தருளிச் செய்து, சமயவாதிகளை வாதில் வென்று, கோயிலை மீட்டு அவர் நிர்வாகத்தில் ஒப்படைத்தனர். அதற்காக அவ்வூர் வைணவர்களும், கோயில் பணியாளர்களும் தங்கள் வருமானத்தில் ஒரு பகுதியை இறைவன் அழகிய மணவாளப் பெருமாளுக்கு வழிபாடு நடத்தவும், மாலை அணிவிக்கவும் பூந்தோட்டத்தை நிர்வகிக்கவும் வழங்கினார்கள் என்று மற்றொரு ஒரு கல்வெட்டு தெரிவிக்கிறது.

திருவிக்ரமப் பெருமானை ஸ்ரீவேதவியாஸ பட்டர் மங்களா சாஸநம் செய்துகொண்டும், ஸந்நிதி கைங்கர்யத்தை நிருவகித்துக் கொண்டும் வாழ்ந்து வந்தார்.

அக்காலத்தில், அந்நாட்டினையாண்டு வந்த சைவசோழ மன்னரால் அந்த ஸந்நிதி மறுபடியும் அபகரிக்கப்பட்டது. எம்பெருமான்

எழுந்தருளியிருக்கும் கர்ப்ப மண்டபத்து வாயில் கல்சுவரால் மூடப்பட்டும், முன்புறத்தில் சிவலிங்கமும் சிவாலயச் சின்னங்களும் அமைக்கப்பட்டும் சைவர்கள் வழிபாட்டுக்குற்றதாக்கி வைக்கப்பட்டது.

அதனடியாக, தாஸ்ய சுகத்தினையிழந்த பட்டர் ஆறாப் பெருந்துயருற்றார். தடம்புனல் சடைமுடியன் தனியொரு கூறமர்ந்துறையும் உடம்புடையான் கவராத உயிரினால் குறைவிலமே என்றநுஸந்தித்து, அவர் திருவிக்ரமன் திருத்தாள்களில் விண்ணப்பம் செய்து, சரீரத்தை விடுவதற்கு நிச்சயித்து, உண்ணாது உறங்காது, தளர்வுற்று வருங்காலையில், ஒரு நாள் இரவில் தம்மையறியாது நித்திரை வசப்பட்டார். அடியவருக்கு மெய்யனாகின்ற திருவிக்ரமன் அவர் கனவில் தோன்றி, பட்டரே! சோகந்தவிர்வீர், ஜீயர் அவதரிக்கப் போகின்றார், அவரால் இத்தலம் உத்தரிக்கப்படும், ஆறியிரும் என்று திருவாய் மலர்ந்தருளினன். பட்டரும் தெளிந்தெழுந்து, பகவான் பெருங்கருணையைப் பலகாலும் புகழ்ந்து திருவரங்கத்தை யடைந்து, அரங்கநகர் அப்பனை மங்களாசாஸநம் செய்து கொண்டு ஜீயருடைய திருவவதாரத்தை எதிர்நோக்கித் தரித்திருந்தார்.

## ஸ்ரீமத் எம்பெருமானார் ஜீயர் திருவவதாரம்

பரன் சென்றுசேர் திருவேங்கட மாமலைக்கு வடக்கே முல்குதிர் (மோட்சம் கொடுக்கக் கூடியது) என்னும் ஒரு கிராமம் உண்டு அதில் கொண்டன் ஐயங்கார் என்பவர் ஒருவர் இருந்தார். அவரை கிருஷ்ண ஐயங்கார் என்றும் அழைப்பதுண்டு. அவர் மனைவியின் பெயர் மாதவம்மங்கார் என்கிற செங்கமல வல்லி. இல்லறத்தை நல்லறம் பொலிய நடத்திவந்து சிறப்புற்று விளங்கிய அவ்வைதிகத் தம்பதிகள் புத்திர பாக்கியம் இல்லாமல் நெடுங்காலம் பெருங்குறையுற்றுவந்து, குளிரருவி வேங்கடத்துக்குச் சென்று, அப்பனிடத்தில் தங்கள் குறையைத் தீர்த்து வைக்கும்படி வேண்டிக் கொண்டார்கள். சில நாட்கள் சென்றதும், செங்கமல வல்லியார் கர்ப்பவதியாய், பிரசவ காலத்தில் பொறுக்கவொண்ணாத நோயுற்றுத் துடித்துக் கொண்டிருந்தார். அப்போது கிருஷ்ணயங்கார், செடியாய வல்வினைகள் தீர்க்கும் திருமாலே! நெடியானே! வேங்கடவா! என் மனைவி சுகமாக ஓர் ஆண்மகவைப் பெறுவாளாயின், அந்த மகவை தேவரீர் ஸந்நிதியில் நித்திய கைங்கரியம் செய்வதற்குச் சமர்ப்பிக்கின்றேன் என்று திருவேங்கடமுடையானைப் பிரார்த்தித்துக் கொண்டார். செங்கமல



வல்லியாரும் எண்ணரும் சீர் நல்லார் பரவும் ஓர் ஆண் மகவை, சாலிவாஹந சகாப்தம் 1374 (கி.பி. 1452)க்குச் சரியான ஸ்ரீமுக வருஷம், தைமாதம், மிருகசீரிஷ நட்சத்திரம் கூடிய நன்னாளில் சுகமாக ஈன்றார்.

அக்குழந்தையின் தேஜோரூப குணசேஷ்டிதங்களைக் கண்ட மறைவாணர் அதனைத் திருவனந்தாழ்வான் அமிசமாக அறுதியிட்டனர். அதற்கு இராமாநுஜன் என்றும் திருநாமம் சாத்தினர்.

திருத்துழாய் பரிமளத்தோடே கூடி முளைக்குமாபோலே, ஞானபக்தி விரக்திகள் தன் வடிவிலே இட்டுக் காணலாம்படி, வளர்பிறை மதியைப்போல் வளர்ந்து வந்த அந்தப் பாலகனுக்குத் தந்தையார் உரிய காலங்களில் ஜாதகர்மம், அன்னப்ராசனம், சௌளம் ஆகிய சடங்குகளைச் செய்துவைத்தார்.

## உபநயனம் செய்வித்தல்

ஏழாவது வயதில் உபநயநம் திருமலையில் செய்விப்பதாகக் கொண்டனையங்கார் முடிவு கொண்டார், பிரயாணத்திற்கு வேண்டியவற்றைச் சித்தப்படுத்திக் கொண்டிருந்தார், அவருடைய பிரயாணத்திற்கு முன்னால் இரவில், திருமலையப்பன், ஸந்நிதி பரிகரத்தார் கனவிலும் அத்தங்கி சிங்கராசாரியர் கனவிலும் தோன்றி, நம் குழந்தை நாளைக்கு ஸந்நிதிக்கு வருகிறான், அவனுக்கு பெரும் சிறப்புடன் உபநயநத்தை நடத்தி வையுங்கோள், சிங்கராசாரியரே! நீர் அவனுக்குப் பஞ்சசம்ஸ்காரங்களைச் செய்து, வித்தையும் அதிகரிப்பித்துவையும் என்று நியமித்தருளினன். மறுநாள் காலையில், அனைவரும் தாம் கண்ட கனவை ஒருவர்க்கொருவர் சொல்லிக் கொண்டு, இஃதொரு சொப்பனமிருந்த படியென்! வேங்கடவன் திருவருள் இருந்தபடியென்! ஒப்பில்லா அப்பாலகன் யார்? உலகுய்யத் தோன்றிய உத்தமனோ? மூதுவர், கரைகண்டோர், சீரியரிலே ஒருவனோ? முன்னம் நோற்ற அனந்தன்மேல் புண்ணியங்கள் பலித்தவனோ? என்று வியந்து புகழ்ந்து ஆனந்த சித்தராய்ப் பேராவலுடன் பாலகனின் வரவை எதிர்நோக்கியிருந்தனர்.

சிலநாழிகைகள் கடந்தன. கொண்டனையங்காரும் செங்கமல வல்லியாரும் ஸந்நிதியை நோக்கி வந்து கொண்டிருந்தனர். ஒரு இள ஞாயிறு

கால்கொண்டு நடந்தாலொப்ப அவர்களிடையே நடந்துவரும் இராமாநுஜரை ஸந்நிதி பரிகரத்தார் கண்டனர். பொலிக! பொலிக! பொலிக! என்று மங்களாசாஸநம் செய்து, மகிழ்ச்சியுடன் அவர்களைத் தக்க மரியாதைகளுடன் வரவேற்றனர். திருவேங்கடவன் ஸேவையைச் செய்வித்துத் தீர்த்த பிரசாதங்களும் அவர்களுக்கு வழங்கி, எம்பெருமான் நியமனத்தையும் அறிவித்து, அவர்களுடன் கூடியிருந்து குளிர்ந்தனர்.

நல்ல முகூர்த்தத்தில் உபநயநம் பெருஞ்சிறப்பாக நடந்தேரியது. கோயில் அனைத்துக் கொத்தினரும் இராமாநுஜரை சிங்கராசாரியர் திருமாளிகையில் சகல வரிசைகளுடனும், மங்கள வாத்தியங்களுடனும் அழைத்துக்கொண்டுபோய் விட்டு, தாய் தந்தையருக்கும் விடை கொடுத்து அனுப்பி வைத்தனர்.

## சிங்கராசாரியர் திருவடிகளில் ஆசிரயித்தல்

அதன்பின் சிங்கராசாரிய ஸ்வாமி பஞ்ச சம்ஸ்காரங்களை இராமாநுஜருக்குச் செய்துவைத்து வித்தையும் போதித்து வந்தனர். இராமாநுஜரும், சாந்தீபினி முனிவரிடம் ஓதிய கண்ணபிரானைப் போல சொற்ப காலத்துள் சகல வேத சாஸ்திர இதிகாச புராண தர்க்க மீமாம்சாதிகளையும் ஓதியுணர்ந்து வல்லவரானார்.

## லக்ஷ்மணாரியர் என்னும் திருநாமம் பெறுதல்

பின்னர், ப்ரஹ்ம ஸூத்ரத்திற்கு எம்பெருமானார் செய்தருளிய ஸ்ரீபாஷ்யத்தின் விளக்கமான சுருதப் பிரகாசிகையை ஓதி வருகையில், ஒருநாள் நடுப்பகலில், சூரிய வெப்பத்தினால் சிரமமுற்று இராமாநுஜர் தமதாசாரியன் திருமாளிகைக்கு அடுத்த வீட்டின் இடைக்கழியில் அயர்ந்து உறங்கலுற்றார். பழைமையினால் பழுதாயிருந்த அந்த வீட்டுக் கூறையின் வழியாகச் சூரியக் கிரணங்கள் அவருடைய முகத்தில் தாக்கிக் கொண்டிருந்தன. அக்கிரணங்களை ஒரு பாம்பு தன் படத்தினால் தடுத்துக் கொண்டிருந்தது.

பிற்பகல், நேரமாகியும் இராமாநுஜர் காலக்ஷேபத்திற்கு வரக்காணாமையால், ஆசாரியர் அவரைத் தேடச் செய்தார். தேடிச்சென்ற



சீடர்கள், இராமாநுஜருடைய நிலைமையக் கண்டு அச்சமும் அதிசயமுமுற்று, விரைந்தோடித் தாம் கண்டதை ஆசாரியருக்கு அறிவித்தனர். யாவரும் நேரில் சென்று பார்த்து வியப்புற்று, இராமாநுஜருடைய நித்திரையைக் குலைக்காமல் திரும்பினர்.

சிறிது நேரம் சென்று உறக்கம் தெளிந்த இராமாநுஜர், காலக்ஷேபத்திற்குக் காலந்தாழ்ந்தது கண்டு நொந்து, தமதாசாரியர் திருவடிகளில் சென்று பணிந்து, தம்மை மன்னிக்கும்படி வேண்டிக் கொண்டார். சிங்கராசாரியரும் பேருவகையுடன் அவரை வாரியணைத்து நம் லக்ஷ்மணாரியரோ நீர் என்று பணிந்தார். அன்றிலிருந்து இராமாநுஜருக்கு லக்ஷ்மணாரியர் என்கின்ற திருநாமம் வழங்கப் பெற்றது.

பின்னர், லக்ஷ்மணாரியர் ஆழ்வார்கள் அருளிச் செயல்களையும், பூருவாசாரியர்கள் அருளிச் செய்துள்ள இரகசியங்களையும், அவற்றின் வியாக்கியானங்களுடன் ஐயந்திரிபற, ஓதியுணர்ந்தார். வயதும் இருபத்து மூன்று நிறம்பப் பெற்றார்.

## ஜீயர் திருமலை அப்பனுக்குப் புஷ்ப கைங்கரியம் செய்தல்

லஷ்மணாரியருடைய அறிவாற்றலையும், கல்வித் திறத்தையும், சாந்த சமதமாதி குணப்பெருக்கினையும் கண்ட சிங்கராசாரியர் அவரை ஓர் அவதார புருஷராகவும் எதிராசருடைய அமிசபூதராகவும் மதித்துத் தமது திருமாளிகையில் இனி அவர் வசித்தல் சரியன்றென அறுதியிட்டுத் திருவேங்கடமுடையான் ஸந்நிதியில் எழுந்தருளச் செய்து வைத்தார்.

லஷ்மணாரியரும், எம்பெருமான் பொன்மலைமேல் ஏதேனு மாவேனே என்று பெரியோர் அபிநிவேசித்த திருமலையில் தாம் செய்யத் தக்க கைங்கரியம் யாதென்று சிந்தித்து வானவர் வானவர் கோனோடும் சிந்து பூ மகிழும் திருவேங்கடத்து அந்தமில் புகழ்க்காரெழில் அண்ணல் திருவடிகளில் பூ விடுகையே சிறந்ததெனத் தெளிந்து, ஸந்நிதிக்கு அணித்தான ஓரிடத்தில் அழகிய நந்தவனம் ஒன்றமைத்துப் பூத்தொண்டு செய்துகொண்டும் அப்பனை மங்களாசாஸநம் செய்துகொண்டும் வாழ்ந்து வந்தார்.

## ஜீயர் என்னும் திருநாமம் பெறுதல்

இவ்வண்ணம் மூன்றாண்டுகள் கழிந்தன. ஒரு நாள் திடீரென திருவேங்கடமுடையான் ஸந்நிதி ஸ்ரீகாரியத்துரந்தரராய் அப்போது எழுந்தருளியிருந்த ஸ்ரீமத் கேள்வியப்பன் பெரிய ஜீயர் சுவாமி திருநாடலங்கரித்தனர். ஸந்நிதி பரிகரத்தார் அவர் பீடத்திற்கு யாரை நியமிப்பது என்பதறியாமல் கலங்கி, அப்பன் திருவடிகளில் விண்ணப்பித்துக் கொண்டனர். திருவேங்கடத்தப்பனும், நமக்கு அந்தரங்கரான லக்ஷ்மணாரியரை ஸந்நியஸிக்கச் செய்து பெரிய ஜீயர் பீடத்தை அலங்கரிக்கச் செய்யும் என்று அர்ச்சமுகேன நியமித்தருளினான். ஸந்நிதி பரிகரத்தாரும் க்ருதார்த்தராய், வியந்து கொண்டாடி, பகவான் நியமனத்தை லக்ஷ்மணாரியருக்கு அறிவித்தனர். அவரும் உவந்து, எம்மனா! என்குலதெய்வமே! என்னுடைய நாயகனே! நின்னுளேனாய்ப் பெற்ற நம்மை இவ்வுலகினில் யார் பெறுவார்! என்று வேங்கடத்தண்ணல் திருவருளையும், அன்பையும், அபிமானத்தையும் பலகாலும் புகழ்ந்து கொண்டாடி, உடனே ஸர்வ ஸங்கப் பரித்யாக பூர்வகமாக ஸந்நிதி பரிகரத்தார் அவரைச் சகல மரியாதைகளுடன் ஸந்நிதிக்கு எழுந்தருளச் செய்து, திருவேங்கடத்து எண்ணில் தொல்புகழ் வானவர் ஈசன் திருமுன்பே விட்டனர். அவரும் அப்பனைக் கண்களாரச் சேவித்து மங்களாசாஸநம் செய்து, சிதிலாந்தக் கரணராய் கண்களகம் பொழுக நிற்கின்ற காலையில், அப்பனும் அவரைக் குளிர நோக்கித் தனது சோதிவாய் திறந்து, வாரீர்ஜீயரே! என்றழைத்துத் தீர்த்தம், திருமாலை, திருப்பரியட்டம், ஸ்ரீசடகோபனையும் ஸாதித்துச் செங்கோல் முத்திரையையும் அவர் கையில் ஒப்புவித்தான். அன்றுமுதல் லக்ஷ்மணாரியருக்கு திருமலை கேள்வி ஜீயர் என்கிற திருநாமம் வழங்கப் பெற்றது.

ஜீயரும் அத்யந்தப் பரதந்திரராய், பெரிய கேள்வி ஜீயர் பீடத்தை அலங்கரித்திருந்து, ஸந்நிதி ஸ்ரீகாரியங்களை குறையற விசாரித்து நிருவகித்து வந்தனர்.

குளிரருவி வேங்கடத்துக் கோவிந்தன் ஜீயர்பால் வைத்துள்ள அருளையும் ஆதராதிசயத்தையும், ஜீயருடைய திருமேனிப் பொலிவையும், கல்யாண குணங்களையும் அறிந்து அநேகர் அவர் திருவடிகளையடைந்து சிஷ்யராயினர்.



## சந்திரகிரி மன்னன் ஜீயரை ஆசிரயித்தல்

ஜீயருடைய பிரபாவங்களைக் கேள்வியுள்று, சந்திரகிரி நகரத்தை யாண்டுவந்த வேங்கடபதி நாய்க்கர் திருமலைக்கு வந்து, தன்னை யாட்கொள்ளும்படி அவர் திருவடிகளில் பணிந்து பிரார்த்திக்க, ஜீயரும் உகந்து அம்மன்னனுக்குப் பஞ்ச சம்ஸ்காரங்களைச் செய்து அடிமை கொண்டார். மன்னனும் குருபக்தி தலையெடுக்கப் பெற்று, சுவாமியைப் பிரிந்திருக்க இயலாதவனாய், அடிக்கடி அவரை வந்து ஸேவிப்பதும், சில நாள் அவர் திருவடிவாரத்தில் தங்கியிருந்து சொரூப விஷய காலக்ஷேபங்கள் கேட்பதும், போவதுமாய் அவருக்கு அத்யந்த பரதந்திரனாய், அவருடைய விருப்பங்களையெல்லாம் பரம பிராப்பியமாக (பெறாப்பேறாக) நிறைவேற்றி வருவானாயினன்.

## திருமலை அப்பன் ஜீயருக்கு சொப்பனம் அருளல்

இப்படியிருக்கையில், ஒருநாள் இரவு திருவேங்கடமுடையான் ஜீயர் கனவில் தோன்றி, அவருடைய அவதாரத்தின் பிரயோஜநத்தையும், சோழனால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள திவ்விய தேசங்களையும், அவற்றின் புநருத்தாரணத்தின் பொருட்டு அவர் செய்ய வேண்டியவற்றையும் திருவாய் மலர்ந்தருளினன். அதே இரவில், வேங்கடபதி நாய்க்கருக்கும் கனவில் இவ்விருத்தாந்தங்களை அறிவித்து, அவர் ஜீயருக்குச் செய்ய வேண்டிய சகாயங்களையும் கட்டளையிட்டு வைத்தனன்.

ஜீயர், கனவின் விவரத்தைத் தம் சீடர்களுக்குக் கூறி, அதனை வெங்கடபதி மன்னனுக்கு அறிவித்து வரும்படி அவர்களுள் சிலரை உடனே அனுப்பி வைத்தார். இங்கு இவ்வாறாக,

சந்திரகிரி மன்னன், தனக்குப் பகவான் சாதித்த சொப்பனத்தை நினைந்து நினைந்து அதிசயமுற்று, உடனே தனது பரிவாரத்துடன் ஜீயருக்கு அதனை விண்ணப்பிக்கப் பிரயாணமாகினன். வழியிடையில் ஜீயருடைய சீடர்களைச் சந்திக்கலுற்றுச் செய்தியை அறிந்து, பேரானந்தப் பெருங்கடலுள் அழுந்தினன். இரு திறத்தோரும் சேர்ந்து, விரைவில் ஜீயர் ஸந்நிதியையடைந்தனர். ஜீயர் திருத்தாள்களில் அரசன் விழுவதும் எழுவதுமாய், சந்தோஷப் பெருக்கினால் ஒன்றும் சொல்லிக் கொள்ள

இயலாதவனாய் அகங்குழைந்து நின்றனன். ஜீயரும் அவனைக் குளிரக் கடாக்ஷித்துத் தாம் திவ்விய தேசப் புநருத்தாரணத்தின் பொருட்டுப் புறப்பட வேண்டியுள்ளதைத் தெரிவித்தார். மன்னனும் சுவாமிக்குத் தண்டிகை முதலான சகல உபகரணங்களும் வேண்டிய பரிவாரங்களும் கொடுத்துப் பிரயாணப்படுத்தி அனுப்பிவைத்தான். அன்றியும், திருக்கோவலூரானது செஞ்சியை ஆண்டு வந்த துவால் கிருஷ்ணப்ப நாய்க்கருடைய அதிகாரத்திற்குட்பட்டிருந்ததால், அம்மன்னனுக்கும் மற்றுமுள்ள அதிகாரிகளுக்கும் ஜீயரின் பிரயாண விவரங்களை எழுதி அவருக்கு வேண்டியவற்றை அருகிலிருந்து செய்துவிக்கும்படி தெரிவித்து வைத்தான்.

## ஜீயர் திருமலை அப்பனிடம் விடை பெறுதல்

ஜீயர், திருமலை அப்பன் ஸந்நிதி பரிகரத்தார் அனைவரையும் கூட்டி, அவர்களுக்கு அப்பன் நியமனத்தையும் தனது பிரயாணத்தையும் விபரமாகத் தெரிவித்து, நகரில் அமரர் முனிக்கணங்கள் விரும்பும் திருவேங்கடத்தானுக்குத் திருவாராதனத்தையும் விழாக்களையும் குறையற பெருக்க நடத்திவரும்படி நியமித்து, அப்பனை மங்களாசாஸநம் செய்து, தீர்த்தப் பிரசாதங்களைப் பெற்றுத் திருமுன்பே கைகூப்பி நின்றனர். அப்பனும் அவரைக் குளிர நோக்கி, ஜீயரே! சுகமாகப் போய்வாரும் என்று விடைகொடுத்து, சந்தன ரதம் ஒன்றை அவரிடம் ஒப்புவித்துத் திருக்குருகூரில் நம் சடகோபனுக்கு இதைச் சமர்ப்பியும் என்று பணித்தருளினன்.

## திருக்கோவலூர் புநருத்தாரணம்

பதினேழாண்டுகள் திருமலையில் ஸ்ரீமத் கேள்வியப்பன் பெரிய ஜீயர் பீடத்தை அலங்கரித்து வந்த ஜீயரும், எம்பெருமான் நியமனப்படியே தமது நாற்பத்தேழாவத வயதில், சந்தன ரதத்தை எழுந்தருளச் செய்து கொண்டு, சகல பரிவாரங்களும் புடைசூழ திவ்விய தேசப் புநருத்தாரணத்திற்குப் புறப்பட்டார். முதன் முதலாகச் சைவர்களால் ஆக்கிரமிக்கப்பட்ட திருக்கோவலூரின் நிமித்தமாகச் செஞ்சி மன்னன் சமஸ்தானத்தை நாடிச் சென்றார்.



சந்திரகிரியரசன் அனுப்பிய கடிதத்தினால் ஜீயரின் வரவையறிந்து காத்துக் கொண்டிருந்த செஞ்சிவேந்தன் சுவாமியைத் தக்க மரியாதைகளுடன் எதிர்ச் சென்று வரவேற்று உபசரித்தனன். ஜீயரும் திருக்கோவலூர் ஆயனார் ஸந்நிதியின் விவரத்தை அம்மன்னனுக்குத் தெளிவுபெற எடுத்துக்கூறி, அத்தலத்தைத் தம்மிடம் ஒப்புவிக்கும்படி பணித்தார். அவனும் மறுமாற்றம் ஒன்றும் சொல்ல இயலாதவனாய், சுவாமியுடன் திருக்கோவலூருக்கு வந்து சேர்ந்தனன்.

## சைவர்களின் வாதம்

துவால் கிருஷ்ணப்ப நாய்க்கர் வரவின் விபரத்தையறிந்த அத்தலத்துச் சைவர்கள், தங்கள் வழிபாட்டில் வந்து கொண்டிருக்கும் அந்த ஸந்நிதி வைணவத் தலமன்று எனப் பலமாக மறுத்தும், அதனை விடக்கூடாதென அரசனை நிர்ப்பந்தித்தும், ஜீயரை எதிர்த்து வாதிட்டனர். அரசனும் ஒன்றும் தோன்றப் பெறாதவனாய்க் கலங்கி, ஜீயரைப் பணிந்து, சுவாமி சிவச் சின்னங்கள் பலவற்றால் சூழ்ந்து விளங்கும் இந்தக் கோவிலில் விஷ்ணுச் சின்னங்கள் ஒன்றும் காணப்படவில்லையே, தேவரீருடைய விருப்பத்தை அடியேன் எங்ஙனம் நிறைவேற்ற இயலும்? என்று தழுதழுத்தக் குரலுடன் விண்ணபித்துக் கொண்டனன். ஜீயரும் ஆழ்வார் அருளிச் செயல்களையும், புராண வரலாறுகளையும், மற்றும் பல விருத்தாந்தங்கயையும் எடுத்துக் கூறி அவனுக்குத் தெளிவையூட்டினார்.

ஜீயர் எடுத்தோதிய பிரமாணங்களில் மன்னன் நம்பிக்கை கொண்டு விட்டான் என்பதை அறிந்த சைவர்கள் மன்னனை நோக்கி வேந்தே! இவர் தமது நாவீறுடைமையால் தங்களை மயக்க வைக்கின்றனர். இவர் கூறுகின்ற பிரமாணங்களை இலக்காகக் கொண்ட தலம் இதுவல்ல என்பதே எங்கள் துணிபு. இதனை நம்புங்கள், நாங்கள் செய்வது வீண்வாதமன்று, நூல் பிரமாணங்களைக் கொண்டு வாதிடுகின்றோமில்லை. பிரத்தியக்ஷமாகத் தாங்கள் கண்டுவந்ததும், கண்டு வருவதுமே எங்கள் பக்ஷத்திற்கு அசைக்க முடியாத அத்தாக்ஷியன்றோ? இது சிவத்தலந்தான் என்பதில் தாங்கள் ஐயுற வேண்டாம் என்று மன்றாடினர்.

மன்னன் அவர்களை நோக்கி நீர் சொல்வதும் உண்மையே, எனினும், உங்கள் பக்ஷத்தைக் கொண்டு இப்பெரியார் கூற்றினை மறுத்தற்கில்லையே.

ஆழ்வார் மங்களாசாஸநத்திற்குற்றதான விஷ்ணுத் தலம் வேறொன்றும் ஈண்டு காணப்படவில்லையே. இருந்து, காலப்பழமையால் அழிந்துபட்டது என்று கேள்வியுற்றதும் இல்லையே. இருந்ததுண்டாயின் சொல்லிக் காணுங்கள் என்றனன்.

## ஜீயரை முடித்துவிடச் சூழ்ச்சி

மன்னனின் மனோ நிலையை யறிந்த சைவர்கள் இனி அவன் வழிச் செல்லல் ஒன்றொழிய வேறு செய்தற்கில்லாமை கண்டு, வஞ்சகத் துறையால் ஜீயரை முடித்துவிட வேண்டும் என்கின்ற முடிவு கொண்டு, அரசனை நோக்கி தலைவா! தாங்கள் பகர்வதும் சரியே. ஆயினும், எங்கள் இருதிறத்தோரின் வாதில் உள்ள உண்மையினை ஓர் அருஞ்செயல் மூலமாக நிலைநிறுத்தலே சாலச்சிறக்கும். நாங்கள் கண்கூடான காக்ஷியைக் காட்டி வாதிக்கின்றோம். இப் பெரியார் நூல் அளவைக் கொண்டு வாதத்தின் உண்மையை அருஞ்செயல் மூலம் நிலைப்படுத்த வேண்டியவர். எனவே, இவர் தீமூட்டிய சுண்ணாம்பு காளவாயிடை இருந்து தமது பக்ஷத்தை உறுதிப்படுத்துவாராயின் நாங்கள் இசைவோம். உலகோர் பழிதூற்றும் தங்களுக்கு நேராது என்றனர்.

இம்மர்ம வஞ்சகரின் மொழிகளால் மனமுடைந்து, மன்னன் ஒன்றும் சொல்ல இயலாதவனாய்த் தயங்கி நிற்றலைக் கண்ட ஜீயர் மன்னனை அறமொழிகளால் தேற்றி, அரசே! அஞ்சற்க! தேகளீசன் திருவருள் முன்னிற்கும். இவர்கள் விருப்பப்படியே செய்கின்றேன். ஆனால், இவர்களை யான் ஒரு நிபந்தனை கேட்கிறேன். யான் வெற்றி பெறுவேனாயின், இவர்கள் அத்தனைபேரும் வைஷ்ணவர்களாகிவிட வேண்டும் என்றனர். ஜீயர் சுண்ணாம்புக் காளவாயில் வெந்தொழிவர் என்ற திடவெண்ணங் கொண்ட சைவவாதிகள் அவ்வாறே தாங்கள் உடன் படுவதாக மன்னனிடம் வாக்குறுதியளித்தனர். ஜீயரும் தாமதமின்றிச் சுண்ணாம்பு காளவாய் அமைக்கச் செய்யும்படி அரசனைக் கோரினர். அரசன் அவ்வண்ணமே ஏவ, தங்கள் சூழ்ச்சி பலித்துவிட்டதென்று சைவவாதிகள் உள்ளம் பூரித்துத் தங்கள் களிப்பை வெளிக்காட்டாமல், உடனே சுண்ணாம்பு காளவாய் ஒன்றமைத்து, அதில் படுக்கும்படி ஜீயரைக் கோரினர்.



## ஜீயர் சுண்ணாம்பு காளவாயில் இருந்து சபதம் செய்து வெற்றி பெறல்

ஜீயர் பெருமானும் குளிரருவி வேங்கடக்கோன் திருவாணையைச் சிந்தைசெய்து, இடைக்கழி எந்தையின் இன்னருளை அரணாகக் கொண்டு, ஆங்கரும்பிக் கண்ணீர் சோர்ந்து அன்பு கூறும் அடியவர்கட்கு ஆரமுதமானவனே! தூவடிவின் பார்மகள் பூமங்கையோடு சுடராழி சங்கு இருபால்பொலிந்து தோன்ற காவடிவின் கற்பகமே போல் நின்று கலந்தவர்கட்கு அருள்புரியும் கருத்தினானே! பொய்கைக் கோள்முதலை வாளெயிற்றுக் கொண்டற்கு எள்கி அழுந்திய மாகளிற்றினுக்கு அன்று ஆழியேந்தி அந்தரம்மே வரத்தோன்றி அருள் செய்தோனே! இருமங்கைம்மா கரிமுனிந்து, பரியைக் கீறி, இனவிடைகள் ஏழடர்ந்து, மருதம் சாய்த்து, வரும் சகடம் இறவுதைத்து, மல்லையட்டு, வஞ்சம் செய்கஞ்சனுக்கு நஞ்சானவனே! என்னுடை ஆக்கையுள்ளும் ஆவியுள்ளும் அல்ல புறத்தினுள்ளும் நீக்கமின்றி எங்கும் நிற்கும் அப்பனே! அடலாழியானே! சீரேறு மறையாளர் நிறைந்த செல்வத் திருக்கோவலூரதனுள் உன்னைக் கண்டிடக்கூடும் நாள் என்று கொல்! என்று கொல்! பின்னை என்று கொல்? என்று ஆயனார் திருவடிகளில் விண்ணப்பித்துக் கொண்டே அக்காளவாயினிடை சாய்ந்தருளினர். எழுச்சியாளரும் தீமூட்டினர். காளவாய் செந்தழலும் வெந்தழலுங் கொண்டு, புறமெங்கும் கடுங்கனல் காவக் கொழுந்துவிட்டு ஓங்கி எரியலுற்றது.

நீராய் நிலனாய்த் தீயாய்க் காலாய் நெடுவானாய் சீரார் சுடர்களிரண்டாய் சிவனாய் அயனாய் இலங்கும் நெடியோனான எந்தை ஆயனார் திருவருளால் காளவாயில் வெந்ததீ ஜீயர் பெருமானுக்குச் சிறு வெப்பமுந்தரவில்லை. மெல்லிய பூங்காற்றினிடை பூம்படுகையினிற்றும் எழுவதுபோல், திருமேனி கோலமழியாமல், வாடாமல், அப்பொழுது பூத்த செந்தாமரையை யொத்துத் திருமுகம் செவ்வியுற்றொளிர, செந்துவராடைமின்ன எழுந்து, ஆயனார் எழுந்தருளியுள்ள திக்கு நோக்கி இரு கரங்களையும் கூப்பித் தொழுதவண்ணம் காளவாய் எரிந்து தணியும் வரையில் நின்றிருந்தார்.

ஜீயருக்கு என்ன விளையுமோவென்று வயிறு பிசைந்தவனாய் வாட்டமுற்று நின்றிருந்த மன்னன் இவ்வருங்காட்சியைக் கண்டு வியந்து

மகிழ்ந்து ஜீயரைப் பலமுறையும் தொழுவனாயினன். ஒழிந்தார் ஜீயர் என்று உள்ளம் களித்து நின்ற வஞ்சக வாதிகள் உடல் நடுங்கி, உள்ளம் நடுங்கி, எண்ணமழிந்து நின்றனர். பின்னர், மன்னன் வேண்ட, ஜீயர் பெருமான் அவர்களுக்கு ஆறுதல் அளித்து, அவர்களோடு அரசனையும் கோவிலுக்கு அழைத்துச் சென்றனர்.

### ஆயனார் காட்சி

அவர்களைக் கர்ப்ப மண்டபத்து வாயிலை மூடியிருந்த கல்திரையின் முன் நிறுத்தி, அந்தச் சுவற்றில் ஜீயர் தமது முக்கோலால் ஓர் அளவு காண்பித்துத் திறக்கும்படி பணித்தார். மன்னனும் அங்ஙனமே செய்வித்தனன். நீள்வாள்குறளுருவாய் நின்றிரந்த மன்னனும் மற்றவரும் கண்டனர், திடுக்கிட்டனர், ஜீயர் பெருமானின் அருள் சக்தியைப் புகழ்ந்து கொண்டாடினர், அவரைப் பலகாலும் வலம் வந்து ஏத்தித் தொழுதனர்.

ஆயனார் ஸேவையைக் கண்ட ஜீயர் பேரானந்தப் பெருங்கடலுள் ஆழ்ந்து, தம்மை மறந்து, பின்பு தெளிந்து, அன்றிவ்வுலகம் அளந்தாய் அடிபோற்றி என்று மங்களாசாஸநம் செய்து,

மஞ்சாடு வரையேழும் கடல்களேழும்
வானகமும் மண்ணகமும் மற்றும் எல்லாம்
எஞ்சாமல் வயிற்றடக்கி ஆலின் மேலோர்
இளந் தளிரில் கண்வளர்ந்த ஈசன் தன்னை
துஞ்சா நீர்வளஞ் சுரக்கும் பெண்ணைத் தென்பால்
தூய நான் மறையாளர் சோமுச் செய்ய
செஞ்சாலி விளை வயலுள் திகழ்ந்து தோன்றும்
திருக்கோவலூரதனுள் கண்டேன் நானே!

என்றநுஸந்தித்துத் தொழுது ஏத்தி நின்றனர்.

### புல்லைக் காட்டி நந்தியைக் கீழையூர் விடுதல்

பின்பு, அந்த கோயிலில் உள்ளும் புறமும் அமைக்கப் பட்டிருந்த சிவலிங்கம், சிவச்சின்னங்கள் அனைத்தையும் அரசனைக் கொண்டு, கீழையூரில், சைவக் குரவர்கள் பாடலுக்குற்றதான சிவன்கோயிலில் சேர்க்கச் செய்தனர். நந்தி மாத்திரம் எவ்வகையாலும் அகற்ற இயலாததாய் இருந்தது. அதனைத் தாமே புல்லைக் காட்டித் தந்திரமாக அழைத்துச் சென்று அந்தக் கோயிலில் நிலைக்க வைத்தார். அதுமுதல் ஜீயருக்குப் புல்லைக்காட்டி நந்தியைக் கீழையூர் விடுத்தவர் என்னும் திருநாமம் வழங்கப் பெற்றது.



### ஜீயர் எல்லை நிபந்தனை செய்வித்தல்

பின்னர், ஜீயர் செஞ்சி மன்னனிடம், இனி இத்தகைய துராக்ரமிப்புக்கு இடம் நேராவண்ணம் ஆயனார் திருத்தலத்திற்கு ஓர் எல்லை குறிப்பிட்டு, அந்த எல்லைக்குள் சைவர்கள் குறுக்கிடக் கூடாதென்றும் கட்டளையிட்டு வைத்தல் நன்றெனப் பணித்தருள, மன்னனும் இசைந்தனன். இந்த நிபந்தனைக்கிசைய மனமில்லாத சில சைவர்கள் அப்பொழுதும் ஒரு சூழ்ச்சி செய்யலுற்றனர். மன்னனிடம், வேந்தே! இந்த நிபந்தனை ஏற்றற்பாலதன்று, தங்கள் ஆணையை நாங்கள் மறுத்தற்கும் இல்லை. ஆகையால், எங்கள் கோரிக்கையும் ஒன்று ஏற்றருள்க. ஒருவன் தலையில் நெருப்புக் கரகம் வைத்து வயிற்றில் சூலத்தைக் குத்தி எல்லையோடவிட வேண்டும். இவ்வண்ணம் அமைக்கப்படும் எல்லையே பக்ஷபாதமற்றதாகும் என்று கூறினர். மன்னனும் ஜீயர் பெருமானின் அநுமதிக் கொண்டு சம்மதித்தான். எனினும், அவர்களுள் ஒருவரும் அந்தச் செயலுக்குடன்பட்டு முன்வரவில்லை.

அக்கால், அத்தலத்தைச் சார்ந்த திருக்குலத்தடியார் சேரியில், ஆயனார் திருவடிகளில் பெரும் பக்திசீலனாய் வாழ்ந்து வந்த பெரியான் என்ற ஓரடியார் முன்வந்து, "உலகங்களை எல்லை நடந்து தன்னதென ஏடிட்டு வைத்த என் அப்பனுக்கு யான் எல்லை போடுகின்றேன்" என்று பேருவப்புடன் அங்ஙனமே செய்து, எல்லையிட்டு வைத்தார். சைவர்கள் ஏமாற்றமடைந்தனர். அரசனும் அந்த எல்லைக்குள் சைவர்கள் ஒருவரும் குடியிருக்க கூடாதென்று ஆணையிட்டு வைத்தான்.

### செஞ்சி மன்னனும் சைவவாதிகளும் ஜீயருக்குச் சீடராதல்

ஜீயர் பெருமானுடைய அப்ரதிம வைபவத்தைக் கண்கூடாகக் கண்ட செஞ்சி மன்னனான துவால் கிருஷ்ணப்ப நாய்க்கன் ஜீயர் சுவாமிகள்

திருவடிகளை ஆசிரயித்து அவருக்குச் சீடனாயினன். ஜீயருக்குக் கொடுத்திருந்த வாக்குறுதிப்படி வாதிட்ட சைவர்களையும் அவருக்கு சீடராக்கி வைத்தனன். வைணவராதற்குத் துணியாத சைவர்கள் பெரும்பாலோர் அத்தலத்தினின்றும் வெளியேறி சென்றுவிட்டனர். அவர்கள் ஒவ்வொருவர் கனவிலும் ஜீயர் எழுந்தருளி, அவர்களுக்குப் பஞ்சம்ஸ்காரம் செய்துவைத்து ஆட்கொண்டார்.

## எம்பெருமானார் ஜீயர் என்று திருநாமம் பெறுதல்

பின்பு, ஜீயர் கிருஷ்ணப்ப நாய்க்கனின் உதவியைக் கொண்டு, ஆயனார் ஸந்நிதிக்கு வேண்டிய திருப்பணிகளை முடித்துவைத்து, ஆயனாருக்கு நித்திய கைங்கரியங்களும் திருவிழாக்கள் முதலானவைகளும் பெரும் சிறப்பாக நடந்து வருகைக்கு ஆவனவற்றையும் நியமித்துவைத்து, ஆயனாரைத் திருவடி தொழுது மங்களாசாஸநம் செய்தருளுகையில், எம்பெருமான் போர உகந்தருளி, ஜீயரைக் குளிரக் கடாக்ஷித்து வாரீர் எம்பெருமானாரே! என்று திருநாமம் சாற்றியருளினன். அதுமுதல், ஜீயர் எம்பெருமானார் ஜீயர் என வழங்கப் பெற்றார்.

## ஸ்ரீமுஷ்ணப் புநருத்தாரணம்

ஆயனார் சகல மங்களங்களும் கண்டருளும்படி நோக்கிக் கொண்டு எம்பெருமானார் ஜீயர் மூன்று வருடங்கள் திருக்கோவலூரில் எழுந்தருளியிருந்தார். பிறகு, ஸந்நிதி நிருவாகத்தை நெருங்கிநின்று கவனிக்கும்படி செஞ்சி மன்னனுக்கு நியமித்தருளி, திருக்கோவலூர் வைபவத்தைப் பேசும் பாத்ம புராணத்தில் நாரதரிடம் மஹாவிஷ்ணு பூலோகத்தில் எனக்கு ஸ்ரீமுஷ்ணமும், திருக்கோவலூரும் மிகவும் உகப்பானது என்று உள்ளது. அதன்படி நானும் ஸ்ரீமுஷ்ணம் போக இருக்கிறேன் என்றார். பின்னர், எம்பெருமானார் ஜீயர் ஆயனாரிடம் விடைபெற்றுத் தமது ஐம்பதாவது வயதில் ஸ்ரீமுஷ்ணத்திற்கு எழுந்தருளினார். ஆங்குச் சந்நிதிப் புநருத்தாரணத்தைச் செய்து வைத்து, ஞானப்பிரானை எறிதிரை வையம் முற்றும் ஏனத்துருவாய் இடந்த பிரான், இருங்கற்பகஞ்சேர் வானத்தவர்க்கு மல்லாதவர்க்கும் ஞானப் பிரானையல்லால் இல்லை நான்கண்ட நல்லதுவே என்று மங்களாசாஸநம் செய்தருளுகையில், பூவராகப் பெருமானும் ஜீயரைப் போரக் கடாக்ஷித்தருளி, தீர்த்தம் திருமாலை, திருப்பரியட்டம், ஸ்ரீ சடகோபனையும் சாதித்து, அவருக்கு அத்தலத்தில் ஒரு மடமும், ஸந்நிதியில் இரண்டாந் தீர்த்தமும் கருவூலத் திறப்பு முத்திரைகள் திருவாபரணங்கள் முதலான சுதந்திரங்களையும் வழங்கிவைத்தான். இந்த மடத்தில் வந்த ஜீயர்கள் ஸ்ரீமுஷ்ணத்தில் பல திருப்பணிகள், உத்ஸவங்கள், ஆகியவைகளைச் செய்துள்ளனர். இன்னும் ஸ்ரீமுஷ்ண தீர்த்தக்காரர்களில் ஜீயர் ஸ்வாமி ஒருவருக்கே ஸந்நிதி குமாஸ்தா என்ற ஸ்தானம் உண்டு. அவர் ஜீயர் ஸ்வாமியின் கைங்கர்யங்களை செய்து வருகிறார். ஸந்நிதியில் திருவாபரணங்களும் சமீபகாலம் வரை ஜீயர் ஸ்வாமியிடத்திலேயே இருந்து வந்தது.



## திருக்கண்ணமங்கைப் புநருத்தாரணம்

ஜீயர் சுவாமி ஒரு வருட காலம் ஸ்ரீமுஷ்ணத்தில் எழுந்தருளி யிருந்தார். அதன்பின் திருமங்கையாழ்வார் "மாயனை மதிள்கோவல் இடைகழி மைந்தனைச் சென்று நாடி கண்ணமங்கையுள் கண்டு கொண்டேனே" என்று அருளிச் செய்துள்ளபடி கண்ணமங்கைக்குச் செல்ல விரும்பினார். அதனால், ஞானப்பிரான் நியமனம் பெற்றுத் திருக்கண்ண மங்கைக்குச் சென்று, ஸ்ரீ பக்தவத்ஸலன் ஆலயப் புநருத்தாரண காரியங்களைப் பூர்த்தி செய்து, திருக்கோவலுடைகழி மைந்தனை, எண்ணில் முனிவர்க்கருள் தரும் தவத்தை, முத்தின் திரள்கோவையைப் பத்தராவியை மங்களாசாஸநம் செய்தருளுகையில், அந்தணர் கற்பாகிய அப்பன் உகந்தருளி, ஜீயரை வாழ்த்தி, அத்தலத்தில் அவருக்கு மடமும், செங்கோல் முத்திரையும், கருவூலத் திறப்பு முதல் தீர்த்தம், ஸ்தல ஆசார்ய முதலான உரிமைகளும் வழங்கின.

## நவதிருப்பதி புநருத்தாரணம், நவதிருப்பதி ஜீயர் என்னும் திருநாமம் பெறுதல்

ஜீயரும், கமுநீர் மலரும் கண்ணமங்கையுள் ஈசனை ஒரு வருட காலம் மங்களாசாஸநம் செய்து கொண்டிருந்தார். ஜீயரின் அப்ரதிம மந்திர சக்தியையும், ஞானத்தையும் அறிந்த நவதிருப்பதி எம்பெருமான்கள் ஜீயரை திருக்கூருத்துக்கு வரும்படி நியமித்தார். பின்பு அப்பெருமானின் நியமனம் பெற்று நல்லார் நவில் குருகூருக்கு எழுந்தருளினார்.

அங்கு, போத்திமார்கள் கைவசம் இருந்துவந்த நவதிருப்பதி களையும், அவர்களையும் சாஸ்த்ரோக்தமான வழியாலும் தம் யுக்திகளாலும் நல்லுரையாலும் தெளிவித்துச் செயித்து, அத்திருப்பதிகளை தம் வசமாக்கிப் புநருத்தாரணம் செய்வித்துத் திருக்குருகூரதனுள் பொலிந்து நின்ற பிரானை மங்களாசாஸநம் செய்தருளுகையில் ஆடுபுட்கொடி ஆதிமூர்த்தியும் ஜீயரை விசேஷ கடாக்ஷம் செய்தருளி, அவருக்குத் தீர்த்தம், திருமாலை, திருப்பரியட்டம், ஸ்ரீ சடகோபனையும் சாதித்துத் தன் சோதிவாய் திறந்து, வாரீர்! நவதிருப்பதி ஜீயரே! "நமது சந்நிதி ஸ்ரீகாரியங்களைக் கவனித்து நடத்திக் கொண்டு போரும்" என்று பணித்தனன். ஜீயரும் `தந்யோஸ்மி' என்று ஆதிப்பிரானைத் தொழுது, நம்மாழ்வாரை மங்களாசாஸநம் செய்து, அவருக்குத் திருவேங்கடமுடையான் அனுப்பிவைத்த சந்தன ரதத்தைச் சமர்ப்பித்தார். அதுமுதல் சுவாமிக்கு நவதிருப்பதி ஜீயர் என்னும் திருநாமம் வழங்கப் பெற்றது.

## வீரவேங்கடதேவராயன் ஜீயரை ஆசிரயித்தல்

ஜீயருடைய வைபவங்களையும், திருமேனிப் பொலிவையும், லௌகீக வல்லமையையும் நேரில் கண்டு அதிசயித்த அந்த் தேசத்துக் கதிபதியான வீரவேங்கட வேதராயன் என்னும் சைவ அரசன், சுவாமி திருவடிகளை ஆசிரயித்துச் சீடனாயினன். சுவாமிக்கு மடம் ஒன்று அமைத்துக் கொடுத்து, நவதிருப்பதிகளின் முதல் தீர்த்தம் முதலிய சகல உரிமைகளையும் அவருக்கே ஆக்கி வைத்தனன். அவன் அளித்த சாஸனம் 36ம் பக்கத்தில் காண்க.

## ஜீயர் ஸ்ரீ வைகுண்டத்தில் எழுந்தருளியிருத்தல்

பெரும் மகிழ்ச்சியுடன் ஜீயரும் நவதிருப்பதிகளையும் ஒவ்வொன்றாகச் சென்று மங்களாசாஸநம் செய்து வருகையில், ஸ்ரீ வைகுண்டத்தில் விண்ணோர் பரவும் தலைமகனான ஸ்ரீ வைகுண்டநாதன் ஸந்நிதியில் எழுந்தருளியிருக்கும் ஸேனைமுதலியார் போர உகந்தருளி, வாரீர் நவதிருப்பதி ஜீயரே! என்று அருளப்பாடிட்டுத் தீர்த்தப் பிரசாதங்களை வழங்கி, அத்தலத்திலேயே நித்தியவாசம் செய்யும்படி நியமித்தருளினார்.



வீரவேங்கட தேவராயன் அவ்விடத்தில் சுவாமிக்கு ஒரு மடம் அமைத்துக் கொடுத்து, ஸந்நிதி மரியாதைகளையும், பல மானியங்களையும் வழங்கினான். சுவாமியும் பெருஞ்சிறப்புடன் பதினாலு வருடகாலம் ஸ்ரீவைகுந்டத்தில் எழுந்தருளியிருந்து, நவதிருப்பதி ஸ்ரீகாரியங்களையும் நிருவகித்து வந்தார். அங்குள்ள பெரும்பான்மையான மக்கள் சுவாமியின் திருவடிகளை ஆசிரயித்துச் சீடராயினர்.

## ஜீயர் திருவரங்கத்துக்கு எழுந்தருளியிருத்தல்

இவ்வண்ணம், தமது பெரும்புகழ் எட்டுத்திக்கும் சுடர்விட்டுப் பிரகாசிக்க, ஜீயர் ஸ்ரீவைகுண்டத்தில் எழுந்தருளியிருக்கும் செய்தியைக் கேள்வியுற்று, திருவரங்கத்தில் வாழ்ந்துவந்த வேதவியாச பட்டர் பெரும் சந்தோஷ சித்தராய், அவரைத் திருவரங்கத்திற்கு எழுந்தருள்வித்ததற்காக ஸ்ரீவைகுண்டம் செல்வதற்கு முயன்று கொண்டிருந்தார். அப்போது, நம்மாழ்வார் ஜீயர் கனவில் தோன்றி, "ஜீயரே! நீர் திருவரங்கத்திற்கு சென்று, அங்கு நம் கூரத்தாழ்வான் ஸந்நிதிப் பிரதிஷ்டையைச் செய்து வையும்" என்று நியமித்தார். உடனே ஜீயரும் தமது சொப்பன விருத்தாந்தத்தை வீரவேங்கட தேவராயனுக்கு அறிவித்து, நவதிருப்பதி கைங்கரியங்களும் குறையற நடப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தவைத்துத் தமது அறுபத் தாறாவது வயதில் திருவரங்கத்துக்குப் பிரயாணமானார். தேவராயனும் சுவாமிக்குச் சகாயமாகத் தக்க பரிவாரங்களை அனுப்பி வைத்தான்.

ஜீயர் வரவையறிந்த கோயில் திருமுற்றத்தாரும் வேதவியாச பட்டரும் தக்க மரியாதைகளுடன் அவரை எதிர் சென்றழைத்து, அவருக்காகக் குறிப்பிட்டிருந்த திருமாளிகையில் எழுந்தருளச் செய்து உபசரித்தனர். பட்டரும், ஏகாந்தத்தில், கோயிலில் முக்கியமாக நடைபெறவேண்டிய கூரத்தாழ்வான் ஸந்நிதி பிரதிஷ்டைக்கு உத்தம நம்பி என்பவரால் ஏற்பட்டுள்ள எதிர்ப்பு, கைசிக புராண படன அருளப்பாடுகளின் குறைவு, அதிகார வர்க்கத்தாரால் நேர்ந்துள்ள இடுக்கண்கள் முதலானவற்றை ஜீயரிடம் பெரும் துக்கத்துடன் விண்ணப்பித்துக் கொண்டனர். ஜீயரும், திருவரங்கன் திருவருள் அனைத்தையும் சீர்படுத்தும் எனப் பணித்து, தம்முடைய கனவின் வரலாற்றையும் அறிவித்து, அவரைத் தேற்றித் தம் காரிய சித்திக்கு அநுகூலமான சமயத்தை எதிர்பார்த்திருந்து வந்தார்.

## வேதவியாச பட்டரின் விருப்பத்தை நிறைவேற்றல்

இப்படியிருந்து வருகையில், உத்தமநம்பி வமிசத்தார் ஒருவர் இல்லத்தில் ஓர் அவசம் நேர, அந்த சமயத்தைப் பயன்படுத்திக் கொண்டு, உத்தம நம்பியையும் அவர் பந்துவர்க்கத்தாரையும் திருத்திப் பணிகொண்டார். அவரால் தடைப்பட்டிருந்த கூரத்தாழ்வான் ஸந்நிதிப் பிரதிஷ்டையும் இனிது நடைபெறலுற்று, பட்டருக்குச் சாஸனமும் செய்து கொடுக்கப்பட்டது. பின்னர், ஸ்ரீகைசிக புராண படனம், ப்ரஹ்மரத அருளப்பாடுகள் ஆகியவற்றைத் தாமே நடத்திக் கொண்டு, ப்ரஹ்மரதத்தில் தடையாக இருந்து வந்த பிரமராக்ஷசை அடக்கி விரட்டியோட்டி, மற்றும், பட்டருக்கு அதிகார வர்க்கத்தாரால் நேர்ந்திருந்த இடுக்கண்களையும் நலமாக்கிக் கொடுத்தார். பட்டரும், தமது குறைகள் முற்றும் நீங்கப்பெற்று, ஜீயர் திறத்தில் மிக்க க்ருதஜ்ஞராய் இருக்கலுற்றார்.

திருவரங்கத்தில் மட்டும், ஸந்நிதியில் தீர்த்த மரியாதைகளும் மற்றும் பல உரிமைகளும் ஜீயருக்கு அதிகார வர்க்கத்தால் கட்டளையிடப்பட்டன. ஒரு வருடகாலம் அரங்கநகர் அப்பனை மங்களாசாஸநம் செய்துகொண்டு ஜீயர் திருவரங்கத்தில் எழுந்தருளியிருந்தார்.

## ஜீயர் திருக்கோவலூருக்கு மீளுதல்

ஜீயருடைய வைபவச் சிறப்பினைக் கண்ட கோயில் திருமுற்றத்தாரும் ஸ்ரீரங்கநாராயண ஜீயர் முதலான ஆசாரியப் புருஷர்களும் நம்பெருமாள் ஸந்நிதிப் பெரிய திருமண்டபத்தில் ஒன்றுகூடி, பட்டருக்கு அபிமானத் தலமாகிய திருக்கோவலூர் ஆயனார் ஸந்நிதி ஸ்ரீகாரிய துரந்தரத்வம் ஜீயருக்கேதான் இருத்தல் வேண்டுமெனத் தீர்மானித்துத் தங்கள் விருப்பத்தை ஜீயருக்கு அறிவித்துச் சம்மதிக்கச் செய்து, அந்த ஸந்நிதியில் முதல் தீர்த்தம், கைசிக புராணபடனப்ரஹ்மரத அருளப்பாடு முதலிய சகல உரிமைகளும், திருவரங்கத்திலும் மற்ற திவ்விய தேசங்களிலும் ஆசாரியப் புருஷர்களுக்கு நடந்தேறி வருவதைப்போன்று அருளப்பாடு மரியாதைகளும் நடந்து வரவேண்டும் என்றும், அதிகார வர்க்கம் இவற்றைக் கவனித்து வரவேண்டும் என்றும் ஜீயருக்குப் பட்டயம் பண்ணிக்கொடுத்தார்கள். இத்தகைய வரிசைகளைப் பெற்றுக் கொண்டு



பெரும் சிறப்புடன் ஜீயர், தமது அறுபத்தேழாவது வயதில் திருக்கோவலூருக்கு மீண்டெழுந்து அருளினார். (பட்டய விவரத்தைப் பக்கம் 40 ல் காண்க).

எம்பெருமானார் ஜீயரின் வரவையறிந்த செஞ்சி மன்னன் துவால் கிருஷ்ணப்ப நாய்க்கரும் சந்திரகிரி மன்னன் வெங்கடபதி நாய்க்கரும் திருக்கோவலூருக்கு விரைந்து வந்து, ஜீயரைப் பணிந்து, ஆனந்தப் பெருக்கினால் கண்களில் நீர்பெருக நின்றனர். சுவாமி அவர்களுக்கு நல்லாசி கூறி வாழ்த்தி, நடந்த விருத்தாந்தங்கள் அனைத்தையும் அவர்களுக்கு விபரமாகத் தெரிவித்தார். மன்னர் இருவரும் மகிழ்வெய்தி, சுவாமியின் வைபவத்தைப் பலகாலும் புகழ்ந்து கொண்டாடினர், ஜீயருக்குத் திருக்கோவலூரில் மடம் ஒன்று அமைத்து வைத்தனர், ஆயனார் ஸந்நிதியில் பல மண்டபங்கள் கட்டி வைத்தனர், மடத்துக்கும் ஸந்நிதிக்கும் நித்திய ஆராதனைக்கும் உத்சவாதிகளுக்கும் வேண்டிய மானியங்கள் எழுதிவைத்தனர். இவற்றைச் செய்து முடித்து, ஜீயரின் பேருவப்புக்கிலக்காகிப் பாக்கிய சாலிகளாய், அவர் நியமனம் பெற்றுத் தத்தம் நகரம் சேர்ந்தனர்.

ஜீயரும், தாம் புநருத்தாரணம் செய்துவைத்து வந்த திவ்விய தேசங்களின் ஸ்ரீகாரியங்களை விசாரித்துக் கெண்டும், ஆயனார் ஸந்நிதி ஸ்ரீகாரியங்களை நேராக நடத்திக் கொண்டும், ஸந்நிதியில் சகல மரியாதைகளுடன் ஆயனாரை மங்களாசாஸநம் செய்து கொண்டும், நாற்பத்தொன்பது வருடங்கள் மடத்தில் எண்ணிறந்த சிஷ்ய சம்பத்துடன் எழுந்தருளியிருந்தார்.

## ஜீயர் திருநாடலங்கரித்தல்

பிறகு, தமது திருவடிகளில் உபஸத்தி செய்து வந்த சிஷ்யர்களுள் சிறந்து விளங்கிய திருமலைநம்பி என்பவரை ஸர்வ ஸங்கப் பரித்யாக பூர்வகமாக ஸந்யஸிக்கச் செய்து திரிதண்ட காஷாயங்களைக் கொடுத்து, திருமலை நம்பி எம்பெருமானார் ஜீயர் என்கின்ற திருநாமம் சாத்தித் தமது பீடத்தை அலங்கரிக்கச் செய்து, தம்முடைய சகல உரிமைகளையும் அவருக்கு ஆக்கிவைத்துத் தமது நூற்றுப்பதினாறாவது திருநட்சத்திரத்தில் கண்ணன் விண்ணூராகின்ற திரு நாட்டினை அலங்கரித்தார்.

## எம்பெருமானார் ஜீயர் மடாதிபதி ஆதீன பரம்பரை தர்ம கர்த்தாக்களின் பட்டம் ஏற்ற காலமும் விபரமும்

| | ஜீயர்களின் பெயர் | வருஷம் | காலம் |
|---|---|---|---|
| 1. | ஸ்ரீஎம்பெருமானார் ஜீயர் | 1521-1569 | 48 |
| 2. | ஸ்ரீதிருமலைநம்பி ஜீயர் | 1569-1594 | 25 |
| 3. | ஸ்ரீலக்ஷ்மணமுனி ஜீயர் | 1594-1611 | 17 |
| 4. | ஸ்ரீநம்புலாசாரிய ஜீயர் | 1611-1627 | 16 |
| 5. | ஸ்ரீ வ்ருத்த எம்பெருமானார் ஜீயர் | 1627-1650 | 23 |
| 6. | ஸ்ரீ வேங்கடபதி ஜீயர் | 1650-1655 | 5 |
| 7. | ஸ்ரீ திருவேங்கட ஜீயர் | 1655-1666 | 11 |
| 8. | ஸ்ரீ கரிய திருமலை ஜீயர் | 1666-1709 | 43 |
| 9. | ஸ்ரீ வேங்கடாசாரிய ஜீயர் | 1709-1736 | 27 |
| 10. | ஸ்ரீ நம்புலாசாரிய ஜீயர் | 1736-1754 | 18 |
| 11. | ஸ்ரீ நைனாராசாரிய ஜீயர் | 1754-1769 | 15 |
| 12. | ஸ்ரீநிவாஸ ராமாநுஜ ஜீயர் | 1769-1781 | 12 |
| 13. | ஸ்ரீ நம்பிள்ளை ராமாநுஜ ஜீயர் (Son of 12) | 1781-1789 | 8 |
| 14. | ஸ்ரீ ராமாநுஜ ஜீயர் (Son of 12) | 1789-1793 | 4 |
| 15. | ஸ்ரீ நைநாராசாரியார் (Son of 12) | 1793-1808 | 15 |
| 16. | ஸ்ரீ எம்பெருமானாராசாரியர் (Son of 15) | 1808-1824 | 16 |
| 17. | ஸ்ரீ வேங்கடாசாரியார் (Son of 15) | 1824-1828 | 4 |
| 18. | ஸ்ரீ வீரராகவாசாரியார் (Grand son of 15) | 1828-1842 | 14 |
| 19. | ஸ்ரீ நைனாராசாரியார் (Brother of 18) | 1842-1853 | 11 |
| 20. | ஸ்ரீ ஸ்ரீநிவாஸாசாரியார் (Brother of 18) | 1853-1871 | 18 |
| 21. | ஸ்ரீ திருவேங்கடராமாநுஜாசாரியார் (Son of 20) | 1871-1892 | 21 |



| | ஜீயர்களின் பெயர் | வருஷம் | காலம் |
|---|---|---|---|
| 22. | ஸ்ரீ ஸ்ரீநிவாஸ ராமாநுஜாசாரியார் (Son of 21) | 1892-1920 | 28 |
| 23. | ஸ்ரீ வீரராகவராமாநுஜாசாரியார் (Grand son of 21) | 1920-1943 | 23 |
| 24. | ஸ்ரீ திருவேங்கடராமாநுஜாசாரியார் (Adopted son of 23) | 1944-1985 | 41 |
| 25. | ஸ்ரீ ஸ்ரீநிவாஸராமாநுஜாசாரியார் (2nd son of 24) | 20.6.1985 | |

இம்மடத்தில் பட்டத்தில் எழுந்தருளியிருந்த ஸ்ரீமத் எம்பெருமானார் ஜீயர் ஸ்வாமிகளில் முதல் 12 பட்டம் வரை ஸந்யாசிகளாகவும், அதற்கும் பிறகு கிருஹஸ்சாச்ர ஜீயர்களாகவும் எழுந்தருளியுள்ளனர். அவர்களும் ஜீயர் ஸ்வாமி என்றே போற்றப்படுகிறார்கள்.

### ஜீயர் என்பதன் பொருள்

திருமலை திருப்பதி தேவஸ்தானத்தின் வெளியீடான சப்தகிரியில் ஜீயர் என்பதன் பொருள் ஸ்ரீமான் தி.அ. கிருஷ்ணமாச்சாரியர் (திருப்பதி) ஸ்வாமியால் கீழ்க்கண்டவாறு விளக்கப்பட்டுள்ளது.

ஜீயர் என்ற சொல் ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தில் க்ருஹஸ்தர், ஸந்யாஸிகள் என்று வாசியில்லாமல் பெரியோர்கள் அனைவருக்குமே வழங்கப்பட்டு வந்திருக்கிறது. மாறனேரி நம்பி விஷயமாகப் பெரிய நம்பி உடையவருக்கு அருளிச்செய்த வார்த்தையை ஸ்மரிப்பது என்ற ஸ்ரீவசனபூஷண சூர்ணையின் (234) வ்யாக்யானத்தில் மணவாள மாமுனிகள் பெரியநம்பி ஸ்ரீபாதத்திலே வந்து உடையவர் ஜீயர் என்று அவரை ஸம்போதித்து வார்த்தைகள் சிலவற்றை விண்ணப்பித்த விஷயத்தைக் குறிப்பிட்டருளியிருப்பது இதற்குச் சான்றாகும்.

ஜீயர் சப்தத்தைப் பற்றி ஸ்ரீகாஞ்சீ மஹாவித்வான் ஸ்ரீ.உ.வே. அண்ணங்கராசார்ய ஸ்வாமி அருளியது:

ஸிம்ஹம் என்ற ஸம்ஸ்க்ருத சப்தம் தமிழில் சிங்கமென்றும் சீயமென்றும் திரிந்து வழங்கி வருவது ப்ரஸித்தம். இதில் சீயம் என்ற சொல்லே ஸிம்ஹத்தைப் போன்றவர் என்ற பொருளில் வழங்கப்படுகிறது. ஸிம்ஹம் யானையைக் கொல்வது போல் வித்வான்களான பெரியோர்களும் புறச்சமயிகளை மாயச் செய்தவதனாலே சீயம் போன்ற வித்வான்கள் சீயர் எனப் பட்டாரென்க. பெரும்பாலும் அவர்களுக்கு சீயர் என்ற பெயர் பொருத்துமாறு காணலாம்.

கச்சிக்கிடாம்பி ஸ்ரீ உ.வே. யாமுநாசார்ய ஸ்வாமி (திருமலை) ஸாதித்ததாவது: சீயன் என்பதற்கு ஸ்ரீமான் என்பதே பொருள். ஸ்ரீ என்பது சீ என்று திரிவது ப்ரஸித்தம். நம்மாழ்வார் மாலரி கேசவன் நாரணன் சீ மாதவன் என்றருளிச் செய்தது கொண்டு இதையறியலாகும். ஸ்ரீ என்பது சீ ஆயிற்று. மான் என்ற மதுப் ப்ரத்யத்தின் பொருளான உடமைமையே அர் என்பதற்குப் பொருள். ஆக சீயர் என்பதற்கு பகவத் ஜ்ஞாநபக்தி வைராக்யங்களாகிற ஸ்ரீவைஷ்ண ஸ்ரீயை உடையவர் என்பது பொருள் சீ-ய்-அர் என்று பிரயும் (இதில் ய் என்பது உடம்படுமெய்). இப்படிப்பட்ட பெருமையை உடைய பெரியவர்கள் சீயர் எனப்படுகிறார்கள்.

இச்சொல் ஜீயர் என்றில்லாமல் சீயர் என்றே பல நல்ல புத்தங்களில் காணப்படுவது குறிக்கொள்ளத் தக்கது. நம் + சீயர் என்பதை நஞ்ஜீயர் என்றும் நாம் வழங்குவது போல் தனியாக வழங்கும் போதும் ஜீயர் என்று வழங்குகிறோம்.

ஆக வைணவகுலத்தை வளர்த்து உயர்த்தி ஸத்தை பெற்ற ஆழ்வார்கள் ஜா: என்றும், அவர்களோடு தொடர்பு கொண்டுள்ள அன்றும் இன்றுமுள்ள எல்லா ஆசார்யர்களும் ஜீயர் என்றும் வழங்கப்படுவது உணரத்தக்கது.

## ஜீயர் சுவாமிகளின் அருந்தொண்டுகள்

ஸ்ரீமுஷ்ணத்தில பெருமாளுக்கு திலகம் சாத்தும்படி ஸ்ரீவைஷ்ணவர்களில் ஒரு சாரார் கோடியக்கரை நிர்பந்தம் செய்தபோது திருக்கோவலூர் எம்பெருமானார் ஜீயர் 21ம் பட்டம் ஸ்வாமிகள் 1886-ல் அங்கு முகாம் செய்து, கவரப்பாளையத்தில் உள்ள தன் சிஷ்யர்களின் ஆதரவோடு பெருமாளுக்குத் தென்கலைத் திருமண்போதும்



சாத்தியிருக்கும்படி செய்தார் - அதன் பின் 1890 முதல் ஆண்டுதோறும் தன்னுடைய யானை முதலிய பரிவாரங்களுடன், எழுந்தருளியிருந்து உத்ஸவத்தை விலட்சணமாக நடத்தி வைத்துள்ளார்.

திருக்கோவலூர் ஸ்ரீமத் எம்பெருமானர் ஜீயர் மடாதிபதி 23ம் பட்டம் ஸ்ரீ.உ.வே. வீரராகவராமாநுஜாசாரிய ஸ்வாமிகள் ஸ்ரீதிரிவிக்ரம ஸ்வாமி தேவஸ்தான ஆதின பரம்பரை தர்மகர்த்தாவாக எழுந்தருளியிருந்த காலத்தில் ஸன்னதி நித்திய, வார பக்ஷ, மாத, வருட உத்ஸவாதிகள் மிகவும் சிறப்பாகவும், பிரம்மோத்ஸவ காலங்களில் த்ரிமதஸ்தர்களுக்கும் ததியாராதனைகள், மாநிலமே வியக்கும்படி செய்தருளினார்.

தமிழகம் முழுவதும் சிஷ்ய சஞ்சாரம் செய்துகொண்டிருந்தார். ஸ்வாமிகாலத்தில்தான் மாசி மஹோத்ஸவம் ஏற்பாடாகி திருக்கோவலூரிலிருந்து கடலூர் தேவனாம்பட்டினம் கடற்கரைக்கு ஸ்ரீபாதம் தாங்கிகளின் தோளின் மேலேயே எழுந்தருளப் பண்ணி சமுத்திரத்தில் தீர்தவாரி கண்டருளப்பண்ணினார். ஸன்னதியின் விமானங்கள் அனைத்தும் திருப்பணிகள் செய்தருளினார்.

24ம் பட்டம் ஸ்ரீமத் எம்பெருமானர் ஜீயர் மடாதிபதி ஸ்ரீ.உ.வே. திருவேங்கடராமாநுஜாசாரிய ஸ்வாமிகள் காலத்தில் தமிழகம் முழுவதும் சிஷ்ய சஞ்சாரம் செய்தருளி பல்லாயிரம் பேர்களுக்கு சமாஸ்ரயணம் செய்து வைத்து ஸ்ரீ வைணவர்- களாக்கினார். சன்னதியின் எல்லா மண்டபங்களும், விமானங்களும் திருப்பணிகள் செய்யப்பெற்று மிகவும் சிறப்பான முறையில் மஹா சம்ப்ரோக்ஷணம் செய்யப் பெற்றது. மாசி மஹோத்வம் நன்றாக நடைபெற்றது. அனைத்து உத்ஸவங்களிலும் அருளிச் செயல் கோஷ்டிகள், பாராயணங்கள் நடைபெறச் செய்தார்கள். பல ஊர்களில் நடைபெற்றுவரும் ஸ்ரீ வைஷ்ண மாநாடுகளில் தலைமை ஏற்று மங்களாசாசனம் செய்தருளினார்கள்.

தற்போதுள்ள 25ம் பட்டம் ஸ்ரீமத் எம்பெருமானர் ஜீயர் மடாதிபதி ஸ்ரீ.உ.வே. ஸ்ரீநிவாஸராமாநுஜாச்சாரிய ஸ்வாமிகள் தமிழ்நாடு முழுவதும் சிஷ்ய சஞ்சாரம் செய்தருளி பல்லாயிரம் பேர்களுக்கு சிறப்பாக திருக்குலத்தவர்களுக்கும் சமாஸ்ரயணம் செய்து வைத்து சிஷ்யர்களாக்கி வைணவர்களாக ஆக்கினார்.

ஸ்வாமிகள் காலத்திலும் ஸன்னதியின் எல்லா மண்டபங்களும், விமானங்களும், கோபுரங்களும் திருப்பணிகள் செய்யப்பெற்று மூன்று முறை சிறப்பாக சம்புரோக்ஷணங்கள் நடைபெற்றன. கட்ட கோபுரம் என்று வழங்கி வந்த வடக்குத் திருவாசல் கோபுரமும் திருப்பணி செய்யப் பெற்று சம்ப்ரோக்ஷணம் செய்யப்பெற்றது. ஸன்னதிக்கான இரண்டு மதிள்சுவர், இரும்பு கிரில்பாது காப்புகள் அமைக்கப்பட்டன. ஆண்டுதோறும் மூன்று நாட்கள் தெப்போத்ஸவம் நடைபெற்று வருகின்றது. த்வஜஸ்தம்பம் புதியதாக நிர்மாணிக்கப்பட்டு லகு சம்ரோக்ஷணம் செய்யப் பெற்றது. மாசி மக தீர்த்தவாரி மஹோத்ஸவம் ஸ்வாமிகள் காலத்திலும் 14 நாட்கள் 42 இடங்களில் மண்டகப்படிகள் கண்டருளி உத்ஸவாதிகள் நடைபெற்று எழுந்தருளச் செய்துள்ளார்கள்.

24ம் பட்டம் பெரிய ஜீயருடைய திருவுள்ளப்படி ஒன்றான எம்பெருமானார் ஜீயருடைய மடம் திருப்பணிகள் செய்யப் பெற்று சம்ப்ரோக்ஷணம் நடைபெற்றது. மேலும் ஒவ்வொரு ஆண்டும் ஒன்றான ஜீயர் ஸ்வாமியின் தைமாதம் மிருகசீரிஷ வருஷ திருநக்ஷத்திர வைபவம் விசேஷமாக நடைபெறுகிறது. 1999ம் ஆண்டு 500வது ஆண்டு பூர்த்தி விசேஷ மஹோத்ஸவமும் சிறப்பு சாற்றுமுறையும் நடைபெற்றது. தற்போது மேற்படி மடம் மீண்டும் மேல்தளம் தட்டோடுகள், மார்பிள் அமைத்தல், விமானம் திருப்பணிகள் தளம் அமைத்தல், சுவர்களில் ஜீயர்களின் வைபவங்கள் வண்ணசித்திரம் தீட்டும் பணிகள் நடைபெறுகின்றன. 2009ம் ஆண்டு சம்ப்ரோக்ஷணம் நடைபெற திட்டமிடப்பட்டுள்ளது. தற்காலம் ஜீயர் ஸ்வாமிகளுக்கு, ஸ்ரீரங்கம், ஸ்ரீமுஷ்ணம், திருகண்ணமங்கை, நவதிருப்பதி ஸன்னதிகளில் வரவேற்பும் விசேஷ மரியாதைகளும் நடபெற்று வருகின்றன.

ஸ்வாமிகளால் புதிய திருத்தேர் நிர்மாணம் செய்யப்பட்டு ஆண்டுதோறும் ரதோத்ஸவம் சிறப்பாக நடக்கின்றது. அதுபோன்றே புஷ்பயாக உத்ஸவமும் விசேஷமாக நடக்கிறது. திருக்கண்ண மங்கையில் திருக்கண்ணமங்கை ஆண்டான் திருவரசை ஜீர்ணோர்த்தாரணம் செய்து வருடாவருடம் ஆனித் திருவோணத்தில் திருக்கண்ணமங்கையாண்டாள் வருஷ திருநட்சத்திர உத்ஸவத்தை பரம விலக்ஷணமாக நடத்துகின்றார்கள். ஆண்டான் மற்றும் மணவாள மாமுனியின் மாத திருநட்சத்திரங்களையும் செம்மையாக நடத்துகிறார்கள்.



ஆழ்வார் திருநகரியில் கண்ணன் ஸந்நிதி திருப்பணி, ஸம்புரோக்ஷணம் நடத்தி, வருஷம் தோறும் ஸ்ரீஜயந்தி உத்ஸவத்தை பொலிவுடன் நடத்துகிறார்கள். ஸ்ரீமுஷ்ணம் ஸம்புரோக்ஷணத்தில் ஆண்டாள் ஸந்நிதி திருப்பணி, மற்றும் ஸம்புரோக்ஷணத்தை தனது உபயமாகச் செய்து வைத்தார்கள். திருக்கோவலூரில் ஆண்டுதோறும் முதலாழ்வார்கள் உத்ஸவத்தில் வைணவ மகா நாடு நடத்தி வருகிறார்கள். திருக்கண்ண- மங்கையில் வருஷம்தோறும் நடக்கும் பெரிய உத்ஸவங்களுக்கு அருளிசெயல் ஸேவா காலம் நடத்தி வருகிறார்கள். இவ்வாறு திருக்கோவலூர் ஸ்ரீமத் எம்பெருமானார் ஜீயர்களின் திவ்ய தேச ரக்ஷணம் மஹத்தானது. இன்னும் தொடர்ந்து நடக்கிறது.



24வது பட்டம் ஜீயர் ஸ்வாமிகள்

## சாஸனங்கள்:

### நவதிருப்பதி ஆதீனம் பற்றியது

ஸ்வஸ்தி ஸ்ரீ விஜயாந்தரமான சாலிவாஹன சகாப்தம் 1727ஆன அக்ஷய ஸம்வத்ஸரம், சைத்ர சுத்த பஞ்சமி, சுக்ர வாரம் ச்ரவண நக்ஷத்திரத்துடன் கூடிய சுப நாமயோக, காலிவாகரணம் கூடிய சுபதினத்தில் பிரதிஷ்டாபித வேதாந்த பிரக்ஷிப்த பஹிர் மந்த்ர:

ஸ்ரீமத் வேதமார்க்க ப்ரதிஷ்டாபநாசார்ய பரமஹம்ச பரிவ்ராஜகாசார்யராயும், நவதிருப்பதிகளுக்கு, ஸ்ரீ கார்யகர்த்தராயும் எழுந்தருளியிருக்கும் திருகோவிலூர் ஸ்ரீமத் எம்பெருமானார் ஜீயர் ஸ்வாமி அவர்களின் திவ்ய ஸந்நிதிக்கு.

ஸ்ரீமத் ராஜாதிராஜ மஹாராஜ ராஜ பரமேச்வர ஸ்ரீ வீரப்ரதாப வீரவேங்கடேதேவமஹாராஜா அவர்கள் ஸ்ரீநகரி நகரத்தில் ரத்தின ஸிம்ஹாஸனத்தை அலங்கரித்து பூமண்டல ஸாம்ராஜ்யத்தை பரிபாலித்து வருகையில் மஹாராஜாதிராஜ ஸ்ரீ தென்மதுரை பாண்டிய ஸிம்ஹாஸனாதிபதியான காச்யப கோத்திரத்தில் உதித்த விஸ்வநாத் வீரப்பநாயக மன்னர் அவர்கள் ஸமர்ப்பித்த ஸ்வதந்தர பூதான தர்ம சாஸனம்.

ராயலய்யா அவர்களின் பிரதிநிதி அமரநாயகம் ஆட்சி செய்து வரும் தாம்ரபர்ணி நதிதீரத்தில் பொலிந்து தோன்றும் (திருமண்டலிகளான) திவ்ய தேசங்களான திருவழுதி வளநாடு ஸ்ரீவைகுண்டம் முதலான ஒன்பது திருப்பதிகளுள் ஸ்ரீ வைகுண்டத்தில் முதல் தீர்த்தம், அருளப்பாடு, திருப்பரிவட்டம், திருமால் அபயஹஸ்தம், வேளையம் ஸம்ஸம் முதலானதும், சாந்திமுத்திரை முதலான முத்திரைகள், பெரிய பண்டாரம் (பெரிய பொக்கிஷ அறை) வியஞ்சன பண்டாரம் முதலான அறைகளுக்கெல்லாம் சுதர்சன, திருதண்ட முத்திரை முதலான அஸ்தங்களும், சாந்திமுத்திரை முதலான முத்திரைகளும், அவ்விடத்தின் அருகில் உள்ள அறைகளுக்கு (ஸ்ரீ ஸ்வாமி நைவேத்திய ப்ரஸாத) பெருமாள் தாயார் அமுது செய்த ப்ரஸாத பணியாரங்களிலும், விடியற்காலையில் தாரஉஷ்ணம், நவநீதம் முதலானவையும், இரவில் திருலீசம் குழம்புப் பால் திருவமுது செய்யப்பட்ட பிறகு (நிவேதனம் ஸமர்ப்பிதித்த பிறகு) வர்க்கான்ன வகைகள் அனைத்தின் வகைக்கும், இரவில் ப்ரஸாதமும் ஸமர்ப்பிக்கப்படும். அமுதுபடி ப்ரஸாதத்தில் வகைக்கொரு கறியமுது திருக்கண்ணமுது முதலான அமுதுசாற்றுபடி, சுருள் ஆறு வகைக்கொரு பணியாரம், வீசம்படியில் நைவேத்தியம், செய்யப்பட்டவற்றில் நூற்றுக்கு ஐந்து பணியாரங்களும், திருப்பாவாடையில் தூமெரு அரிசிப் ப்ரஸாதமும், முத்திரைக்கு ஸ்தானவடத்தில், தீர்த்தம் உள்ள தினத்தில் தினம் ஒன்றுக்கு நான்கு பள்ளயம் ப்ரஸாதமும், வருடத்திற்கு பன்னிரெண்டு கோடி தான்யம், க்ஷேத்திரத்தில், நீர்க்கால்வாய் பாய்கின்ற போரநாதபேரி நான்கு எல்லைகள் உள்ள புனகோளம், அலமேலு மங்காபுரம் நான்கு சதுரம் எல்லைகள் உள்ள கொங்குராயகுறிச்சி எல்லை உள்ள நஞ்சை, புஞ்சை நிலங்கள், பனந்தோப்பு, மாந்தோப்பு முதலானவை எல்லார்க்கும் நல்லா பிள்ளை கைங்கர்யமான ஸ்ரீவராஹ ஸ்வாமி ஸந்நிதியும்.



ஸ்ரீ வைகுண்டநாத ஸ்வாமிக்கு அளிக்கப்பட்ட சவண்டி குருப்பு வட்டமும், அதற்குரிய நஞ்சை, புஞ்சை மாந்தோட்டம், மருவு தோட்டம், ஸ்வர்ணதாமத்துடன் கூடிய நான்கு எல்லையுடன் கூடிய நான்கு பக்கமும் உள்ள தீர்த்த திருநட்சத்திரத்திற்கு அளிக்கப்பட்டுள்ள பணியாரங்கள்.

வராகுண மங்கலத்தில் *திருப்புளியன் குடியில்* ஸ்வாமி ஸன்னதியில் முதல் தீர்த்தம் அருளப்பாடு, திருப்பரிவட்டம், திருமால் அபயஹஸ்தம் ஆயிரம்பேர் சாந்தி முத்திரா முத்திரைக்கு தீர்த்தம் அருளப்பாடும் நித்தியபடி நைய்வேத்ய பிரசாத பணியாரங்களின் வர்க்க வகைகளில் வகைக்கு இரண்டு ஸ்தலங்களில் இரண்டு பள்ளயம் பிரசாதத்தையும் பெத்த அவசரத்தில் கொடுக்கப்பட்ட அரிசிப் பிரசாதம் திருப்பணியாரம் வகைக்கு இரண்டு தினம் ஒன்றுக்கு நெய் கால்படி, எண்ணெய் அரைபடியும், தூர்த்த திருநட்சத்திர பணியாரங்களும் கவுல திருவத்யனம் கட்டளைக்கு சம்பளம் வருடத்திற்கு பன்னிரண்டு கோடி தானியமும் முத்திரைக்கு தினம் ஒன்றுக்கு நான்கு பள்ளயம் பிரசாதம் திருவத்யாயன கட்டளை வருடத்திற்கு எட்டுகோடி நெல்லும் நூற்றுக்கு அஞ்சிவகைப் பணியாரங்கள் அரிசி பிரசாதம் மடத்திலுள்ள மடத்திற்கான அகப்பத்தியில் நாரியில் 8 கோடி விதைகள் மாதாந்திர சர்வமான்யமாகவும்.

தொலைவில்லிமங்கலம் இரட்டைத் திருப்பதியில் தேவபிரான், அரவிந்த லோசன ஸ்வாமி சன்னதியில் இரண்டு இடங்களிலும் முதல்தீர்த்தம் அருளப்பாடு திருப்பரிவட்டம் திருமால் அபயஹஸ்தம் ஆயிரம் பேருக்கு சாந்தி முத்திரைக்கு தீர்த்தம் அருளப்பாடும் ஸ்வாமி நெய்வேத்ய பிரசாத பணியாரங்களில் வர்க்க வகைகளில் அனைத்து வகைக்கு இரண்டு பள்ளயம் பிரசாதமும் பெத்த அவசரம் தூமேடு அரிசி பிரசாதமும் திருப்பணியாரமும் வகைக்கு இரண்டு திருப்பணியாரமும், தீர்த்த திருநட்சத்திரத்திற்கு பிரசாத பணியாரங்களும், முத்திரைக்கு தினம் ஒன்றுக்கு இரண்டு பள்ளயம் பிரசாதமும் வருஷத்திற்கு 6 கோடி தான்யம்.

பெருங்குளம் மாயக்கூத்தர் ஷஸன்னதியில் முதல் தீர்த்தம் அருளப்பாடு திருப்பரிவட்டம் திருமால் அபயஹஸ்தம் வேளையில் ஆயிரம் பேருக்கு சாந்தி முத்திரைக்கு தீர்த்த அருளப்பாடும், மடத்தில் நித்யபடி பிரசாத பணியாரங்களில் நான்கு பாகம் மடத்திற்கு வெண்ணெய், அரைப்படி, நெய் கால்படி, ஒத்துப்படி சுருளும் முத்திரைக்கு தினம் ஒன்றுக்கு இரண்டு பள்ளயம் பிரசாதமும் வருடத்திற்கு சம்பளம் ஆறுகோடி நெல்லும் தீர்த்த திருநக்ஷத்திரத்திற்கு பிரசாத பணியாரமும் மடத்திற்கு இடம், நஞ்செய் நிலமும் கோவிலுக்கு மேற்கில் உள்ள மேல்பத்தியில் இருபது கோடி நெல் விதை சர்வ மான்யமும்.

திருக்கோளூரில் வைத்தமாநிதி சன்னதியில் முதல் தீர்த்தம் அருளப்பாடு திருப்பரிவட்டம், திருமால் அபயஹஸ்தம் ஆயிரம் பேருக்கு, சாந்தி முத்திரா முத்திரைக்கு அருளப்பாடும் நித்யபடி ஸ்வாமி நைவேத்ய பிரசாத பணியாரங்களில் வர்க்க வகைக்கு ஒருபடி பிரசாதமும், பெத்த அவசரம் சம்பாவனையில் நான்கு பள்ளயம் அமுதபடி பிரசாதமும் திருநக்ஷத்திரத்தன்று பிரசாத பணியாரம் முத்திரைக்கு தினம் ஒன்றுக்கு இரண்டு பள்ளயம், வருடத்திற்கு சம்பளம் ஆறுகோடி தான்யமும்.

தென்திருப்பேரை குழைக்காத்தர் சன்னதியில் முதல் தீர்த்தம் அருளப்பாடும், திருப்பரிவட்டம், திருமால் அபயஹஸ்தம், ஆயிரம் பேருக்கு சாந்தி முத்திரைக்கு தீர்த்தம் அருளப்பாடும், நித்தியபடி பிரசாத பணியாரங்களில் வர்க்க வகைக்கு ஒருபடி பிரசாதமும் பெரிய அவசரத்தில் தூமெடு அமுதுபடி பிரசாதமும், திருப்பணியாரத்தில் வகைக்கு ஒரு பணியாரமும், தீர்த்த திருநக்ஷத்திரத்திற்கு பிரஸாத பணியாரமும்



முத்திரைக்கு தினம் ஒன்றுக்கு இரண்டு பள்ளயம் பிரசாதமும், வருஷத்திற்கு ஆறுகோடி நெல்லும்.

ஆழ்வார் திருநகரில் ஷஸ்வாமி சன்னதியின் அருகில் திருவோலக்கத்தில் எம்பெருமானார் ஜீயருக்குப் பின்னால் இரண்டாம் தீர்த்தம் அருளப்பாடு திருப்பரிவட்டம், திருமால் அபய ஹஸ்தவேளையில் சாந்தி முத்திரைகள் முதலான முத்திரைகள் பொன் பண்டாரம் வியஞ்சபண்டாரம் சேனை முதலியார் சன்னதியில் முத்திரைகள் ரக்ஷண சுதர்சன திருதண்ட முதலான முத்திரைக்கு தீர்த்த அருளப்பாடும் எம்பெருமானார் சன்னதியின் தென்பகுதியில் திருவீதியில் வடக்குப் பகுதியில் மடமும் நிவேதனமும் விடியற்காலையில் தார உஷ்ணம் நவநீதம் முதலானவையும் ராத்திரி திருவீசம்படி குழம்பு பாலும், நைவேத்தியம் செய்தபிறகு தார உஷ்ணபாலும் நவநீதம் பெரிய அவசரத்தில் முத்தம அரிசி பிரசாதமும், தளிகையில் ஒருபடி நெய் கறியமுதில் ஒரு கறியமுது இரண்டு கிண்ணம் பாலும், தயிர் இரண்டு கிண்ணம், திருக்கண்ணமுதும், ஒரு சாத்துப்படி பணிமேடு சுருள் பன்னிரெண்டு, வர்க்கவகையில் வகைக்கு ஒருபடி பிரசாதம், நித்யபடி திருப்பணியாரங்கள் வகைக்கு ஒரு பணியாரம், இராத்திரி திருவிழா வேளையில் கும்பு பால் இரண்டு கிண்ணம், மற்றைய சுதந்திர வர்க்க வகைப் பிரசாதங்களும் மடத்தில் தினம் ஒன்றுக்கு திருவேளைக்கெல்லாம் பங்கு நித்தியபடி வீசம்படி, திருநாளைப் படியில் நைவேத்தியம் செய்யப்பட்ட பிரசாத பணியாரங்களில் நூற்றுக்கு ஐந்து எண்ணிக்கை திருப்பணியாரமும், திருப்பாவாடையில் இரு அமுதுபடி பிரசாதமும், வகைக்கு ஒன்று முத்திரைக்கு தினம் வகை ஒன்றுக்கு தினமும் தூமெடு பிரசாதமும், வருஷத்திற்கு சம்பளம் பன்னிரெண்டு கோடி நெல்லும் தீர்த்த திருநக்ஷத்திரத்திற்கு பிரசாத பணியாரங்களும், திருவைசாக கட்டளைக்கு திருக்கைவத்திற்கு ஐம்பது மான்லி ஐந்து கோடி தான்யமும், மடத்திற்கு சொந்தமான திருவேளையாட்டத்தில் வேலூரில் இருபத்தைந்து கோடி விதையும் மாதத்திற்கு நெல்லான் தென்கரையில் இருபது கோடி விதையும், மாதத்திற்கு விடாரத்தில் பதினைந்து கோடி விதையும், அருகில் உள்ள ஆற்றுக்கால்வாய் பாய்கின்ற அறுபது கோடிவிதையும் அருகிலுள்ள நாட்டுப்புறத்தில் ஆழ்வார் நேரி புதுக்குறிச்சி நன்செய், புன்செய் சொர்ணதானம், மாந்தோப்பு, மருவு தோப்பு முதலான எல்லாவிதமான ஆதாரங்களும், சர்வமான்யமாக ஸ்ரீரங்கவீதி

வல்லதிசையில் உள்ள வைகுண்டம் முதலான நவதிருப்பதியில் ஜீர்ணோத்தரான கைங்கர்யத்திற்காக ததீயாராதனம் கைங்கர்யத்திற்கும், தாமிரபரணி முதலான ஏழு நதிதீரத்திலுள்ள வருஷத்திற்கு கோடிக்கு தூமேடு நெல்லும் தந்து புன்செய் கிராமங்களுக்கு ஆயிரத்தில் ஒரு பங்கும், சமர்ப்பணம் செய்தோம். இந்த தர்மம் ஒன்பது திருப்பதிகளுக்கு காரியகர்த்தர்களான திருக்கோவலூர் ஸ்ரீமத் எம்பெருமானார் ஜீயர் ஸ்வாமி அவர்களின் சன்னதிக்கு காசியபர் கோத்தரம் விஸ்வநாத வீரப்ப நாயனய்யா ஆகிய நாம் சமர்ப்பித்தோம். ஆதலால் இந்த சுதந்திர தர்மசாசனம் சூர்ய சந்திரன் உள்ளவரை பாரம்பர்ய கிரமமாக ஸ்வீகரித்துக் கொண்டு அநேக நித்திய ததீயாராதன கைங்கர்யங்களும், ஜீர்ணோத்தாரண கைங்கர்யங்களும் நடத்தி வந்து முக்காலமும் மங்களா சாசனம் செய்து கொண்டு எழுந்தருளி இருப்பீராக. வீட்டை காசியப கோத்ரம் விஸ்வநாத வீரப்ப நாயனய்யா அவர்களின் சமர்பித்துக் கொண்டு தாரா தத்தம் செய்யப்பட்ட தர்ம சாசனம்.



23வது பட்டம் ஜீயர் ஸ்வாமிகள்



**சாஸனம்: திருக்கோவலூர் ஸந்நிதி ஆதீனம் பற்றியது**

ஸ்வஸ்தி ஸ்ரீ விஜய சாலிவாஹன சகாப்தம் 1467 கல்யப்தம் 4646 இதன் மேலே செல்லா நின்ற விச்வாவசு நாம ஸம்வத்ஸரம் ஆவணி மாஸம் 19௳ ஸ்ரீமத் வேதமார்க்க ப்ரதிஷ்டாபனாசாரிய உபய வேதாந்தப்ரவர்த்தகராய் திருவரங்கம் திருப்பதியில் எழுந்தருளியிருக்கும் சகலாசார்ய புருஷாள் ஸ்ரீமத் வேதமார்க்க ப்ரதிஷ்டாபனாசார்ய உபயவேதாந்தப்ரவர்த்தக பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்யர்களான திருக்கோவலூர் எம்பெருமானார் ஜீயருக்கு கைசிக பிரம்ம ரதமும் சகல திவ்ய தேசங்களிலே நடக்க ஜனங்களிடத்தில் நடக்கத்தக்கன பஞ்ச பர்வ சம்பாவனையும் நாம தத்த பூர்வகமாக சாஸனம் பண்ணிக் கொடுத்த சாஸனமாவது.

திருவரங்கன் திருப்பதியில் ஆழ்வார் ஸந்நிதியும், கட்டிவச்சி

***ஸ்ரீவைகுண்ட நாத, விஜயாசன, பூமிபால,***
***தேவேச, பங்கஜ விலோசன சோழநாட்டிய***
***சிஷ்ய பவித்ர மகராலய கர்ண பாசம்***
***நாதம் நமாமி வகுளா பரணேன ஸார்த்தகம்***

என்கிற திருநகரி முதலான ஒன்பது திருப்பதியும் ஜீர்ணோத்தாரணம் செய்தபடியினால் ஒன்பது திருப்பதியிலும் ராமாநுஜ ஜீயர் என்று அருளப்பட்டாய் கொண்டும், திருக்கோவலூர் ஆயனார் சன்னதியை கீழுர் சைவாள் ஆக்ரமித்திருக்கிறார்கள் என்றும் ஸ்ரீமத் அழகியமணவாள பட்டர் நம்முடைய பூர்வீகாள் நிர்வாகம் பண்ண வேணுமென்று யத்னம் பண்ணினவிடத்தில் நிர்வாகம் இல்லாமல், கருடன், சக்கரம், நாமம், சங்கு, அனுமன் இவைகள் உருவம் அமைக்கப்பட்டிருக்கின்றன.

ஸ்வஸ்தி ஸ்ரீ விஜய சாலிவாஹன சகாப்தம் கலியம்தம் இதன் மேல் செல்லா நின்ற விச்வாவசு நாம ஸ்ம்வத்ஸரம், ஆவணி மாதம், ஸ்ரீமந் வேத மார்க்க ப்ரதிஷ்டாபனாசார்ய உபய வேதாந்த ப்ரவர்த்தகராய் திருவரங்கம் திருப்பதியில் எழுந்தருளியிருக்கும் ஸ்தலாசார்ய புருஷரான ஸ்ரீமத் வேதமார்க்க ப்ரதிட்டாபனாசார்யராய், உபயவேதாந்த ப்ரவர்த்தக பரமஹம்ஸ பிரிவ்ராஜகாசார்யர்களான திருக்கோவலூர் எம்பெருமானார் ஜீயருக்கு கைசிக ப்ரம்மரதம் ஸகல திவ்ய தேசங்களிலே நடக்கத் தக்கன

தீர்த்த மரியாதைகளும், ஸம்பாவனைகளும் நாம தத்த பூர்வகமாக சாஸனம் பண்ணிக் கொடுத்த சாஸனமாவது. திருவரங்கம் திருப்பதியில் ஆழ்வார் சந்நதி கட்டிவைச்சு, ஸ்ரீ வைகுண்ட நாதவிஜயாஸந பூமி பால, தேவேச பங்கஜ விலோச சோர நாட்டியம் சிஷ்ய பவித்ர மகராலய கர்ணபாசம், நாதம் நமாமி வருளாபரனேன ஸார்த்தம் என்கிற திருநகரி முதலான ஒன்பது திருப்பதியிலும் ஜீர்ணோத்தாரணம் செய்தபடியினாலே ஒன்பது திருப்பதியிலும் ராமாநுஜ ஜீயர் என்று அருள்பாடு கொண்டும், திருக்கோவலூர் ஆயனார் ஸந்நிதியை கீழூர் சைவாள் ஆக்கிரமித்திருக்கிறார்கள் என்றும் ஸ்ரீமத் அழகிய மணவாள பட்டர் தம்முடைய பூர்வீகாள் நிர்வஹிக்க வேணுமென்று யத்னம் பண்ணின விடத்தில், ஸ்வப்னத்தில் பெருமாள் நியமித்தது த்ருதீயாவதாரமாய் எம்பெருமானார் ஜீயர் எழுந்தருளி தேஹத்யாகம் செய்ய வேணும் என்று இருக்கும் பொழுது, ஸ்வப்னத்தில் பெருமாள் நியமித்தது: த்ருதீயாவதாரமாய் எம்பெருமானார் ஜீயர் எழுந்தருளப்போகிறார். அப்போது ஸ்தலம் உத்தராகமாகும் என்று எங்கள் பூர்வீகர்கள் நியமித்திருந்து அப்படியே தாங்கள் அவதரித்து, பாஷண்ட கண்டனமும் பண்ணித் திருக்கோவலூர் உத்தாரகம் பண்ணினபடியாலே இந்த கைசிக ப்ரம்ம ரதமும் சகலாசாரிய சிஷ்யாளுடைய பஞ்சபர்வ ஸம்பாவனைகளும், நாமத்தத்த பூர்வமாய் சகலசாரிய புருஷர் அடவோர்களும் நம் பெருமாள் ஸந்நிதியில் கருட மண்டபத்துக்கு முன்பாக சம்மதித்து தாமாக சுலோகபூர்வமாக எழுதிக் கொடுத்த சரமபர சாஸனம்.

ஸ்ரீரங்க நாராணய ஜீயர், ஸ்ரீவேதவ்யாசபட்டர், ஸ்ரீ பராசர பட்டர், வாதுலதேசிகர், உத்தம நம்பி, பெரிய நம்பி, கந்தாடை அண்ணங்கார், எம்பார் திருமலை தாதாசாரியார், விஞ்சமுரார், நல்லான் சக்ரவர்த்தி, சோளிங்கர் வரதாசாரியன் மயிலரங்கம் தொட்டாசாரியர், கோவர்த்தனம் வேங்கட கிருஷ்ணமாசாரியார், கந்தாமைட ராமாநுஜர், இந்தப்படிக்கு நியமனத்தில் எழுதியது கோயில் கணக்கு பாண்டியப்பப் பிள்ளை, சிற்பி - வெங்கடாசால கொத்தன், சாக்ஷியர்: வாசுதேவன், ரங்கநாதர்.



## ஸ்ரீரங்கம் பட்டர் சுவாமிகள் எம்பெருமானார் ஜீயருக்கு திருக்கோவலூர் ஸந்நிதியைக் கொடுத்த தர்ம சாஸனம்

ஸ்வஸ்தி ஸ்ரீ விஜய சாலிவாஹன சகாப்தம் 1442 இதற்கு மேல் செல்லா நின்ற விக்ரம நாம ஸம்வத்ஸரமும், உத்தராயணமும் ............ மீன அயனமும் ...................... பௌர்ணமியும், பிருகு வாஸரமும், சுபயோக சுபகரணமும் உத்திர பல்குனி நக்ஷத்ரமும் கூடிய சுபதினத்தில் ஸ்ரீ சோழமண்டல மகா காவேரி தீரத்து உத்தரம் திருச்சினாப்பள்ளி உசாவடி ராஜகம்பீர வளநாடு உத்தரவார வீதி வளநாடு திருவரங்கம் திருப்பதியிலிருக்கும்.

ஸ்ரீமத் வேதமார்க்க ப்ரதிஷ்டாபனாசார்ய உபய வேதாந்தாசாரியான முதல் பிரம்ம சகோதரரான ஸ்ரீபராசரபட்டர் வேங்கடாசார்ய ஸ்ரீவேதவ்யாச பட்டர், ஸ்ரீரங்கநாதபட்டர் இவர்கள் இருவரும் ஸ்ரீமத் வேதமார்க்க பிரதிஷ்டாபனாசார்ய உபய வேதாந்தாசாரியரான பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்யரான திருக்கோவலூர் எம்பெருமானார் ஜீயர் அவர்களுக்கு ப்ரீதிதான தர்மசாஸனம் செய்து கொடுத்த விவரம்.

எங்களுடைய அபிமான ஸ்தலமாகிய திருக்கோவலூர் ஆயனார் ஸன்னதியைத் தாங்கள் ஜீர்ணோத்தாரணம் செய்து, ஸ்ரீரங்கம் திருப்பதியில் கூரத்தாழ்வான் ஸந்நிதி பிரதிஷ்டை செய்து, ஸ்ரீ பராசரபட்டருக்கு தான சாஸனமும் செய்து கொடுத்தும்

ஸ்ரீவேதாவ்யாச பட்டருக்கு சர்க்காரிடமிருந்து சில தடைகள் உண்டான படியால், தாங்கள் நகர வாசலில் ஒரு வருஷ காலம் வ்யாபரிச்சு ப்ரயாசைப்பட்டு க்ஷேத்ரத்தை நிர்வகித்துக் கொடுத்தும், இப்படி எங்களுக்கு வேண்டிய காரியங்கள் செய்து கொடுத்தமையால், இப்போது எங்களுடைய அபிமான ஸ்தலமாகிய ஆயனார் ஸந்நிதி முதல் தீர்த்தமும், புராண பிரம்மரதமும் திருவரங்கன் திருப்பதியில் கிழமாடத்திருவீதியில் கீழ்சரகில் தாமோதர கோபுர நாராயசத்துக்கு தெற்கு, இரண்டாம் திருமாளிகைக்கு வடக்கு, ஆழ்வார்கள் மடமாகிய பெரிய நம்பி திருமாளிகைக்கு எதிர் நிவேசனமான ஆழ்வார் திருமாளிகை கல் அங்கங்களை 8 அகல நீளமுள்ளதை தங்களுக்கு மடமாகவும் அழகிய மணவாளப்பெருமாள் ஸந்நிதியினுடைய ஆசார்ய புருஷர்களில் வரிசைக்கிரமங்கள் தங்களுக்கு

நடக்க வேண்டியதென்றும், ஸ்ரீரங்க நாராயண ஜீயர் முதலாகவுள்ள அனைத்துக் கொத்துப் பரிஜனங்களையும் கேட்டுக்கொண்டு மஹா ரா. ரா. ஸ்ரீ அவர்களுக்குடைய நிருபப்பிரகாரப்படிக்கு ஆழ்வார் ஆசாரியர்களுக்குப் பிறகு எம்பெருமானார் ஜீயர் அருள்பாடு, தீர்த்தம், பரிவட்டம், திருமாலை, சாத்துப்படி, வேளையம், நித்தியப்படி சம்பா தளிகை, வந்தவகை பொங்கல் படி 1, சர்க்கரை பொங்கல் படி 1, திருப்பணியாரம் வகைக்கு 1, இவை எல்லாம் தங்களுக்கு நாங்கள் பிரிதிபூர்வகமாக தான தர்ம சாஸனம் செய்து கொடுக்கிறபடியாலே சந்திரார்க்க சிரத்தியாகத் தானாதி விநியோக விக்ரயங்களுக்கு யோக்யமாக தாங்கள் ஆதீன பரம்பரையாக அனுபவித்துக் கொள்ளக் கடவீராக.

இந்தப் படிக்கு சம்மதித்து, ............ வேங்கடராயர் சமூகத்தில் பஹிரங்க தலம், ஸ்ரீரங்கநாராயண ஜீயர் முதலாகவுள்ள அனந்த கோடி ஸ்தானீகர்கள் சாக்ஷியாக திருக்கோவலூர் எம்பெருமானார் ஜீயருக்கு ஸ்ரீபராசரபட்டர், ஸ்ரீவேதவ்யாஸபட்டர், செய்வதற்குக் கொடுத்த ப்ரீதி தாம்ர சாஸனம். கோவில் கணக்கு ஸ்ரீரங்க நாராயண ப்ரியன் எழுத்து, தவிரவும் தாம்பர சாஸனம்.

| | சாக்ஷிகள்: |
|---|---|
| 1. ஸ்ரீபராசரபட்டர் | 1. பெரியநம்பி அய்யங்கார் |
| 2. ஸ்ரீ வேதவ்யாஸ பட்டர் | 2. கந்தாடை அண்ணன் |
| 3. ஸ்ரீரங்க நாராயண ஜீயர் | 3. சர்வலோக சரன்யாசார் |
| | 4. ஸ்தானீகம் வெங்கடபதி அய்யங்கார் |
| | 5. உத்தம நம்பிள்ளை பெற்ற பெருமாள் |
| | 6. பண்டாரி கோதண்டராமன் |
| | 7. ஆசூரி பட்டர் |
| | 8. கஸ்தூரிரங்கன் |
| | 9. கந்தாடை ஸ்வாமி |

எம்பெருமானார் திருவடிகளே சரணம்!

இவ்வாறு திருக்கோவலூர் ஸந்நிதி ஆதீனம் ஸ்ரீரங்கம் பராசரவேத வ்யாசப்பட்டர்களால் எம்பெருமானார் ஜீயர் ஸ்வாமிக்கு அளிக்கப்பட்டு பரம்பரையாக வருகிறது.



## 3. திருக்கோவலூர் எம்பெருமானார் ஜீயர் மடம் குருபரம்பரை தனியன்கள்

ஸ்ரீமத் வேதமார்க்க பிரதிஷ்டாபநாசாரிய உபய வேதாந்தாசாரிய பரமஹம்ஸ பரிவிராஜகாசாரிய ஸ்ரீமத் கைசிக புராண பிரம்மரத வைபவ பஞ்சபர்வ வேணுவசக்ர நிர்வாஹக நிரதரும் ஸ்ரீமத்பகவத் ராமாநுஜ ஸித்தாந்த நிர்த்தாரக சார்வ பௌமராய், ஸ்ரீ புஷ்பவல்லிஸமேத ஸ்ரீதேகளீச ஸ்வாமி சந்நிதி சகலவித நிர்வாஹகரும் செங்கோல் முத்ராதிகாரருமான ஸ்ரீதிருக்கோவலூர் ஸ்ரீமத் எம்பெருமானார் ஜீயர்ஸ்வாமி மடம், குருபரம்பரை தனியன்கள்.

### வாக்கிய குருபரம்பரை

*அஸ்மத் குருப்யோ நம:*
*அஸ்மத் பரம குருப்யோ நம:*
*அஸ்மத் ஸர்வ குருப்யோ நம:*
*ஸ்ரீமதே ராமாநுஜாய நம:*
*ஸ்ரீபராங்குச தாஸாய நம:*
*ஸ்ரீமந் நாதமுநயே நம:*
*ஸ்ரீமதே சடகோபாய நம:*
*ஸ்ரீமதே விஷ்வக்ஸேநாய நம:*
*ஸ்ரீயை நம: - ஸ்ரீதராய நம:*

### ச்லோக குருபரம்பரை

*அஸ்மத் தேசிகம் அஸ்மதீய பரமாசாரியான் அசேஷான்குருன்*
*ஸ்ரீமல் லக்ஷ்மண யோகிபுங்கவமஹா பூர்ணௌமுனிம் யாமுனம்,*
*ராமம் பத்ம விலோசனம் முனிவரம் நாதம் சடத்வேஷிணம்,*
*ஸேனேசம் ச்ரிய மிந்திரா ஸஹசரம் நாராயணம் ஸம்ச்ரயே.*

### திருமந்தரம்

*ஓம் நமோ நாராயணாய*

த்வயம்

ஸ்ரீமந் நாராயண சரணௌ
சரணம் பிரபத்யே.
ஸ்ரீமதே நாராயணாய நம:!

சரம ச்லோகம்

ஸர்வ தர்மாந் பரித்யஜ்ய மாமேகம் சரணம் வ்ரஜ,
அஹம் த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மாசுச:

25வது பட்டம் வர்த்தமான ஸ்ரீமத் ஸ்ரீநிவாஸராமாநுஜாசாரிய ஸ்வாமிகள் தனியன்

ஸ்ரீசௌநகாந்வய ஸரித் பரிபூர்ண சந்த்ரம்
ஸ்ரீவேங்கடேச குருத்தம புத்ர ரத்னம்
தந்மாதவாப்த நிகமாந்த ரஹஸ்ய ஜாலம்
ஸ்ரீ ஸ்ரீநிவாஸ குருவர்யம் அஹம் ப்ரபத்யே.

வாழித் திருநாமம் (வெண்பா)

வாழிய நல்திரு வேங்கடவர் மாதகவால்
வாழ்ந்திடும் சீநிவாச மாகுரவன் - வாழியவன்
மாறன் மறையும் மும்மந்திரச் செம்பொருளும்
தேறிடச்சீ டர்க்குரைக்குஞ் சீர்.

(எண் சீர்க்கழி நெடிலடி ஆசிரியவிருத்தம்)

ஆவணியில் ஆயில்யத் தவதரித்தோன் வாழியே!
அலகரையும் பதிவந்த தாதைசெல்வன் வாழியே!
கோவலூர் ஆயனார் குணமுரைப்போன் வாழியே!
குழுவுமடி யார்வினைகள் கொய்தருள்வோன் வாழியே!
பூவளரும் நாச்சியரால் பொலிவுற்றோன் வாழியே!
பொய்கைமுதல் பதின்மர்பாப் பொருளுரைப்போன் வாழியே!
காவலராம் வேங்கடவர் கழல்பணிவோன் வாழியே!
கார்பொலியும் சீநிவாச வாரியன்தாள் வாழியே.



(வெண்பா)

பூங்கோவ லூர்வாழ ஆயன் புகழ்வாழ
தேங்குபுகழ் மாறன் மறைவாழ - தீங்கிலா
துன்னுபுகழ் சீநிவாச ராமாநு சாரியனே!
இன்னமொரு நூற்றாண் டிரும்.

நாள்பாட்டு

(பன்னிருசீர்க்கழி நெடிலடி ஆசிரியவிருத்தம்)

தீந்தமிழ் வேதியர் சிந்தை மகிழ்ந்து சிறந்து மகிழ்ந்திடுநாள்
சீருல காரியர் செய்தருள் நற்கலை தீதற விளங்கிடுநாள்
கந்த மலர்ப்பொழில் குருகூர் நாதன் கலைகள் தழைத்திடுநாள்
காரமர் மேனியர் கோவல் நகர்க்கிறை கண்கள் களித்திடுநாள்
எந்தை யெதிவரர் சிந்தைக் குளிர்ந்து இனிது வுகந்திடுநாள்
எழிலுறு யெம்பெரு மானார் சீயர் இன்புற வந்தவர்நாள்
அந்த மில்சீர்ச்சீ நிவாச முனிப்பரன் அவதாரம் செய்திடுநாள்
அழகு திகழ்ந்திடு மாவணி யில்திரு வாயில்ய மெனுநாளே.

24வது பட்டம் ஸ்ரீ.உ.வே. ஸ்ரீமத் திருவேங்கட ராமாநுஜாசாரிய ஸ்வாமிகள் தனியன்

ஸ்ரீ சௌநகாந்வய ஸரித் பரிபூர்ண சந்த்ரம்
ஸ்ரீ வீரராகவ குருத்தம புத்ர ரத்நம்
தந்மாதவாப்த நிகமாந்த ரஹஸ்ய ஜாலம்
ஸ்ரீவேங்கடேச குருவர்ய மஹம் ப்ரபத்யே.

வாழித் திருநாமம் (வெண்பா)

வாழிய நல்வீர ராகவர்தம் வானருளால்
வாழ்திரு வேங்கட மாகுரவன் - வாழியவன்
எட்டெழுத்தி னுட்பொருளும் ஈட்டின் நிறைபொருளும்
சிட்டர் தமக்குரைக்குஞ் சீர்.

(எண் சீர்க்கழி நெடிலடி ஆசிரியவிருத்தம்)

ஆவணியு ரோகிணிநா ளவதரித்தோன் வாழியே!
அலகரையம் பதிவந்த அண்ணலோன் வாழியே!
கோவலிடைக் கழியாயன் குணமுரைப்போன் வாழியே!
குலவுமடி யார்கள்வினை கொய்தருள்வோன் வாழியே!
பாவருசீர் தமிழ்மறைகள் பரிந்துகற்றோன் வாழியே!
பகர்வீர ராகவன்றன் பைங்கழலோன் வாழியே!
தேவனுறை பதிகள்தமை சிந்தைசெய்வோன் வாழியே!
தீதில்திரு வேங்கடநற் றேசிகன்றாள் வாழியே!

(வெண்பா)

திண்கோவ லூர்வாழ சீயர் மடம்வாழ
வண்குருகூர் மாறன் மறைவாழ - எண்ணருசீர்
மன்னுதிரு வேங்கடரா மாநுசா சாரியனே!
இன்மொரு நூற்றாண் டிரும்.

நாள் பாட்டு

மன்னிய நான்மறை யாளர் சிறந்து
மகிழ்ந்திட வந்தவர்நாள்
மாறன் மறைப்பொருள் வீறு பொலிந்து
மலிந்து விளங்கிடுநாள்
நன்னல வாரியர் செய்தருள் நற்கலை
நானிலத் தோங்கிடுநாள்
நவிலரு மெய்பெரு மானார் சீயர்
நல்லரு ளேய்ந்திடுநாள்
வன்கழல் சேர்திரு விக்ரமன் செல்வம்
வளர்ந்து தழைத்திடுநாள்
மாசறு வீர ராகவ னார்செழும்
வாழ்வுமு ளைத்திடுநாள்
மன்புக ழாவணித் திங்களு ரோகிணி
வாய்ந்தொளிருந் திருநாள்
வாழ்திரு வேங்கட மாகுரு வந்திடுங்
கேழறு நன்னாளே.



23-ஆம் பட்டம் ஸ்ரீ.உ.வே. ஸ்ரீமத் வீரராகவராமாநுஜாசாரிய ஸ்வாமிகள் தனியன்

ஸ்ரீவாஸராமாவரஜபதங்கேருஹாச்ரயம்
லக்ஷ்மணார்ய க்ருபாபாத்ரம் வந்தே ஸ்ரீவீரராகவம்.

22வது பட்டம் ஸ்ரீநிவாசராமாநுஜாசாரிய ஸ்வாமி தனியன்

ஸ்ரீமத் தேஹளீநாத திவ்ய சரணாம் போஜாத பிருங்காயதம்
ஸ்ரீமல் லக்ஷ்மண யோகிவர்ய தவீ ஸாம்ராஜ்ய தீக்ஷாதரம்
நைனாரார்ய சுதாத்மஜம் சுருதிசிரோ யுக்மார்த்தசிந்தாபரன்
பூர்வாதீப மருகேந்திர துல்யமனிசம் ஸ்ரீவாஸஸூரிம் பஜே.

19வது பட்டம் ஸ்ரீநைனாராசார்ய ஸ்வாமி தனியன்

ஸ்ரீமத் திருவிக்கிரம பதாம்புஜ ஸக்த சித்தம்
ஸ்ரீவீரராகவ க்ருபாத்த ஸமஸ்த போதம்
புத்தியாதி பவ்ய குணசாகர மக்ரிய நைனாரா
சார்ய வர்யமனிசம் சரணம் பிரபத்யே.

18வது பட்டம் ஸ்ரீவீரராகவாச்சாரிய ஸ்வாமி தனியன்

தேஹளீச க்ருபா பாத்ரம் தீசமாதி குணார்ணவம்
வேங்கடார்ய குரும்வந்தே ஸ்ரீவீரராகவ தேசிகம்.

17வது பட்டம் ஸ்ரீவேங்கடராமாநுஜாசாரிய ஸ்வாமி தனியன்

ஸ்ரீமத் தேஹளீநாத பாதபஜன வ்யக்ரம்
ஸமக்ரங்குணை: ஸ்ரீமல் லக்ஷ்மண தர்ச நைகரிஸிகன்
நைனார்புகேந்திராத் மஜம்
தாஸாநான்னி ரவத்ய ஹ்ருத்யபதவீ
ஸாம்ராஜ்ய ஸந்தாயகம் ஸ்ரீராமாநுஜ
பாதபத்ம பதுமம் ஸ்ரீவேங்கடார்யம் பஜே.

**16வது பட்டம் ஸ்ரீஎம்பெருமானாராசார்ய ஸ்வாமி தனியன்**

ஸ்ரீமத் தேஹளிநாத பக்த மதுலம்
ஸ்ரீபாஷ்ப மந்த்ரார்த்த தன்னைனாரார்யசுதம்
சடாரி வசஸா மர்த்தாப்தி சந்த்ரோதயம்
தர்க்க வ்யாகரண
ப்ரபாகாரவேசோ வாதாஹவே பண்டிதம்
ஸ்ரீமல்லோககுரோர்வ்ய சோவிலஸிதம் ஸ்ரீபாஷ்யகராம்பஜே.

**15வது பட்டம் ஸ்ரீநைனாராசார்ய ஸ்வாமி தனியன்**

ஸ்ரீமத் தேஹளிநாத பத்தமதுலம் வேதாந்தயுக்மோஜ்வல
ஸ்ரீமத் வேங்கட ஸூரிவர்ய சரணாம்போஜாத யுக்மாச்ரதம்
வாத்ஸல்யாதி ஸமஸ்த ஸத்குணநிதிம்
வாக்வைபவனாம்பதன்
நைநார்யகுருமாச்ரயேஹமனிசம் நாத்யம்பதன் நித்யச:

**14வது பட்டம் ஸ்ரீராமாநுஜாசார்ய ஸ்வாமி தனியன்**

ஸேவேஹம் சடவைரி யாமுனமுனி ஸ்ரீசைல பூர்ணாதிம
ஸ்ரீமல் லக்ஷ்மண தர்சநைக ரஸிகம் காருண்யபாதோநிதம்
ஸ்ரீதேஹள்யேதிராஜ ஸேவகவம் ஸ்ரீநம்புலார்யாச்ரதம்
ச்ருத்தியந்த த்விதயார்த்த வேதநசனம் ராமாநுஜார்யங்குரும்.

**13வது பட்டம் ஸ்ரீநம்பிள்ளை ஸ்ரீநிவாஸராமாநுஜ ஜீயர் ஸ்வாமி தனியன்**

ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பதபங்கஜ ஸக்த சித்தம்
பாஷ்யத்வயார்த்த விசதீகரணைக தீக்ஷம்
தேஹள்யதீச மஹனீய க்ருபாரஸஜ்ஞம்
ஸ்ரீநம்புலார்ய குருமன்வ்யஹ மாச்ரயாமி.



**11வது பட்டம் ஸ்ரீநைநாராசார்ய ஜீயர்ஸ்வாமி தனியன்**

ஸ்ரீமத்தேஹளி நாதபூர்ண கருணா வர்த்திஷ்ணு ஸத்வைபவம்,
ஸ்ரீமல் லக்ஷ்மண யோகிசந்த்ர சரணாம் போஜாத பிருங்காயதம்,
வாத்ஸல்யாதி ஸமஸ்த ஸத்குண நிதிம் ஸ்ரீ சைல பூர்ணப்ரபம்,
நைனாரார்ய மஹம்ஆச்ரயே ச்ருதிசிரோ யுக்மார்த்த பாரங்கதம்.

**10வது பட்டம் ஸ்ரீநம்புலாசார்ய ஜீயர்ஸ்வாமி தனியன்**

ஸ்ரீதேஹளீச கருணார்த்ர கடாக்ஷ பாஜம்
ஸ்ரீஸ்ரீநிவாஸ யதிவர்ய பதாப்ஜ ப்ருங்கம்
ஸ்ரீமச்சடாரி நிகமாந்த விசாரசீலம்
ஸ்ரீநம்புலார்ய குருமன்வயஹ மாச்ரயாமி.

**9வது பட்டம் ஸ்ரீவேங்கடாசார்ய ஜீயர்ஸ்வாமி தனியன்**

ஸ்ரீசைல பூர்ண குருவர்ய பதாம்ஜப்ருங்கம்
ஸ்ரீமச்சடாரி யதிரான்னிக மாந்த போதம்
தேஹள்யதிச கருணாகலி தப்ரபாவம்
ஸ்ரீலக்ஷ்மணார்ய முனிமன்வ்யஹ மாச்ரயாமி.

**9வது பட்டம் ஸ்ரீவேங்கடாசார்ய ஜீயர்ஸ்வாமி தனியன்**

ஸ்ரீதேஹளீச விவிதோத்ஸவ ஸக்த சித்தம்
பாஷ்யோபதேச விமலாத்மக சிஷ்யஸங்கம்
ஸ்ரீலக்ஷ்மணார்ய பதஸாரஸலோலப்ருங்கம்
ஸ்ரீலக்ஷ்மணார்யமுனிமன்வயஹ மாச்சயாமி.

**8வது பட்டம் ஸ்ரீகரியநம்பி ஜீயர்ஸ்வாமி தனியன்**

ஸ்ரீநீல சைலேச கடாக்ஷ பாஜம்
ஸ்ரீபாஷ்ய தத்வ ப்ரதமாச்ரிதானாம்
ஸ்ரீலக்ஷ்மணார்யாங்க்ரி ஸரோஜப்ருங்கம்
ஸ்ரீலக்ஷ்மணார்ய முனிவர்யமாச்ர யாம:.

### 7வது பட்டம் ஸ்ரீதிருவேங்கட ஜீயர்ஸ்வாமி தனியன்

ஸ்ரீலக்ஷ்மணார்ய யோகிந்த்ர சரணாப்ஜ மதுவ்ரதம்
ஸேவேச மதமாவஸம் லக்ஷ்மணார்ய மபீஷ்டதம்.

### 6வது பட்டம் ஸ்ரீவேங்கடபதி ஜீயர்ஸ்வாமி தனியன்

ஸ்ரீஸ்ரீநிவாஸ சரணாம்புஜ ராஜஹம்ஸம்
ஸ்ரீமச்சடாரி யதிஸூக்தி ஸுதாவ காடம்
ஸ்ரீலக்ஷ்மணார்ய பதபங்கஜ மத்த ப்ருங்கம்
ஸ்ரீஸ்ரீநிவாஸமுநி தேசிக மாச்ரயாமி.

### 5வது பட்டம் ஸ்ரீவருத்த எம்பெருமானார் ஜீயர்ஸ்வாமி தனியன்

ஸ்ரீலக்ஷ்மணார்ய யோகீந்த்ர பயோதிவர கௌஸ்துபம்
நிகமாந்த ரஹஸ்யஜ்ஞம் லக்ஷ்மணார்ய முநிம்பஜே.

### 4வது பட்டம் ஸ்ரீநம்புலாசார்ய ஜீயர்ஸ்வாமி தனியன்

ஸ்ரீமல் லக்ஷ்மண யோகீந்த்ர ரத்நாகரஸுதாகரம்
வாத்ஸல்யாதி குணைர்யுக்தம் வந்தேலக்ஷ்மண தேசிகம்.

### 3வது பட்டம் ஸ்ரீலக்ஷ்மணமுநி ஜீயர்ஸ்வாமி தனியன்

ஸ்ரீலக்ஷ்மணார்ய ப்ரவணான் லக்ஷ்மணார்ய முநீச்வராத்
அவாப்தோபயவேதாந்த மாச்ரயே லக்ஷ்மணம் முநிம்.

### 2வது பட்டம் ஸ்ரீதிருமலைநம்பி ஜீயர்ஸ்வாமி தனியன்

ஸ்ரீலக்ஷ்மணார்ய யோகீந்த்ர ஸ்ரீபாத கமலாச்ரிதம்
ஸர்வ வேதாந்த தத்வஜ்ஞம் லக்ஷ்மணார்ய முநிம்பஜே.



### 1வது பட்டம் ஸ்ரீமத் எம்பெருமானார் ஜீயர்ஸ்வாமி தனியன்

ஸ்ரீசைல நரஸிம்மார்ய ஸ்ரீபாத கமலாச்ரிதம்
வந்தே யதீந்த்ரப்ரவண ப்ரவணம் லக்ஷ்மணம்முநிம்.

### வாழித் திருநாமம்

தையில் மிருகசீரிடத்தில் தரணிவந்தோன் வாழியே!
தண்கோவ லூர்விளங்கத் தானுதித்தான் வாழியே!
வையகத்தி லீடுரைக்கும் வாசகத்தோன் வாழியே!
வரயோகிக் கருணையினால் வாழ்ந்தருள்வோன் வாழியே!
செய்யவிடை கழியாயன் செல்வம் வளர்த்தோன் வாழியே!
சீராருங் கோவலூர் சிறக்கவந்தோன் வாழியே!
மையல்மிகு கோவலெம்மி ராமாநுசமுனி வாழியே!
மலரடியும் முக்கோலும் மானிலத்தில் வாழியே!

ஆசிரியர்கள் வாழ அருளிச் செயல்வாழ
தாரணியில் பூங்கோவ லூர்வாழ - சீருடைய
மன்னுபுக ழெம்பெருமா னார்முனியே! மாயவனே!
இன்னுமொரு நூற்றாண் டிரும்.

### திருநக்ஷத்திரத் தனியன்

புஷ்யே ம்ருகசீர்ஷோஜ்ஜாதம் ஸ்ரீசேஷாம்ச மஹம்பஜே
ஸ்ரீமத் யதீந்த்ர ப்ரவணப்ரவணம் லஷ்மணம் முநிம்.

### திருமலை சிங்கராசார்ய ஸ்வாமி தனியன்

ஸௌம்யஜாமாத்ருயோகீந்த்ரபதபங்கேருஹாச்ரயம்
ஸ்ரீசைலநரஸிம் ஹார்யம் வந்தே ஸத்குண ஸாகரம்.

### மணவாளமாமுனிகள் முதல் பெரியபெருமாள் வரையில்

### ஸ்ரீமந் மணவாளமாமுனிகள்

ஸ்ரீசைலேச தயாபாத்ரம் தீபக்த்யாதி குணார்ணவம்
யதீந்த்ர ப்ரவணம் வந்தே ரம்யஜா மாதரம்முநிம்.

## ஸ்ரீ திருவாய் மொழிப்பிள்ளை

நமஸ்ஸ்ரீசைலநாதாய குந்திநகர ஜந்மநே
ப்ரஸாத லப்த பரமப்ராப்ய கைங்கர்ய ஸாலிநே.

## ஸ்ரீமத் பிள்ளை லோகாசார்யர்

லோகாசார்ய குரவே க்ருஷ்ணபாதஸ்ய ஸூநவே
ஸம்ஸாரபோகி ஸந்தஷ்ட ஜீவஜீவாதவே நம:.

## ஸ்ரீமந் வடக்குத் திருவீதிப்பிள்ளை

ஸ்ரீக்ருஷ்ண பாதபாதாப்ஜே நமாமி ஸிரஸாஸதா
யத்ப்ரஸாத ப்ரபாவேந ஸர்வஸித்திர பூந்மம.

## ஸ்ரீமந் நம்பிள்ளை

வேதாந்த வேத்யாம்ருதவாரிராசே:
வேதார்த்த ஸாரம்ருத பூர்வமக்ர்யம்
ஆதாயவர்ஷந் தமஹம் ப்ரபத்யே
காருண்ய பூர்ணம் கலிவைரி தாஸம்.

## ஸ்ரீமந் நஞ்சீயர்

நமோவேதாந்த வேத்யாய ஜகந்மங்கள ஹேதவே
யஸ்யவாகம்ருதாஸர பூரிதம் புவநத்ரயம்.

## ஸ்ரீமத் பட்டர்

ஸ்ரீபராசரபட்டார்ய: ஸ்ரீரங்கேச புரோஹித:
ஸ்ரீவத்ஸாங்கஸுதஸ்ஸ்ரீமாந் ச்ரேயஸேமேஸ்துபூயஸே.

## ஸ்ரீமத்எம்பார்

ராமாநுஜ பதச்சாயா கோவிந்தாஹ்வாநபாயிநீ
ததாயத்தஸ்வருபாஸா ஜீயாந்மத் விச்ரமஸ்தலீ.



## ஸ்ரீமத் எம்பெருமானார்

யோநித்ய மச்யுத பதாம்புஜ யுக்மருக்ம
வ்யாமோஹதஸ் ததிதராணி த்ருணாயமேநே
அஸ்மத்குரோர் பகவதோஸ்ய தகைய ஸிந்தோ:
ராமாநுஜஸ்ய சரணௌ சரணம் ப்ரபத்யே.

## ஸ்ரீமத் பெரியநம்பி

கமலாபதி கல்யாண குணாம்ருத நிஷேவயா
பூர்ணகாமாய ஸததம் பூர்ணாய மஹதே நம:.

## ஸ்ரீஆளவந்தார்

யத்பதாம்போருஹத்யாந வித்வஸ்தாஸேஷகல்மஷ:
வஸ்துதாமுபயாதோஹம் யாமுநேயம்நமாமி தம்.

## ஸ்ரீமணக்கால் நம்பி

அயத்நதோ யாமுந மாத்மதாஸ மளர்க்க பத்ரார்ப்பண
நிஷ்க்ரியேணே ய:
க்ரீவாநாஸ்தித யௌவராஜ்யம் நமாமிதம் ராம மமேய ஸத்வம்.

## ஸ்ரீஉய்யக்கொண்டார்

நம: பங்கஜ நேத்ராய நாதஸ்ரீ பாத பங்கஜே
ந்யஸ்த ஸர்வபராயாஸ்மத் குலநாதாய தீமதே.

## ஸ்ரீமந் நாதமுனிகள்

நமோசிந்த்யாத்புதாக்லிஷ்ட ஜ்ஞாநவைராக்யராசயே
நாதாய முநயே அகாத பகவத் பக்திஸிந்தவே.

## ஸ்ரீமந் நம்மாழ்வார்

மாதாபிதா யுவதயஸ்தநயாவிபூதிஸ்
ஸர்வம் யதேவ நியமேந மதந்வயாநாம்
ஆத்யஸ்ய ந: குலபதேர் வகுளாபிராமம்
ஸ்ரீமத் ததங்க்ரி யுகளம் ப்ரணமாமி மூர்த்நா.

## ஸ்ரீமத் சேனைமுதலியார்

ஸ்ரீரங்கசந்தரமஸமிந்திரயாவிஹர்த்தும்
விந்யஸ்யவிஸ்வசிதசிந்நயநாதிகாரம்
யோநிர்வஹத்யநிஸமங்குலிமுத்ரயைவ
ஸேநாந்யமந்யவிமுகாஸ்தமஸிஸ்ரயாம:.

## ஸ்ரீபெரிய பிராட்டியார்

நமஸ்ஸ்ரீரங்கநாயக்யை யத்ப்ருவிப்ரமபேத:
ஈசேஸிதவ்ய வைஷம்யநிம்நோந்நதமிதம் ஜகத்.

## ஸ்ரீபெரியபெருமாள்

ஸ்ரீஸ்தநாபரணம்தேஜ: ஸ்ரீரங்கேஸயமாச்ரயே,
சிந்தாமணிமிவோத்பாந்த முத்ஸங்கேநந்தபோகிந:



ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

## எம்பெருமானார் ஜீயர் ஸ்தோத்திரக் கீர்த்தனை

புதுவை-ஏ.வே. விலக்ஷணகவி இராமாநுஜ நாவலர் இயற்றியது.

இராகம்-நாதநாமக்கிரியை - ரூபக தாளம்

பல்லவி

திருக்கோவலூரில் பிர்ஹ்ம ரதமேறெம்பெருமானார்
ஜீயர் திருவடிகள் போற்று - நெஞ்சே

அநுபல்லவி

ஒருக்காலும் பிறக்காம ருக்கும் பெருஞ்சிறப்பாம்
உத்தம மந்திரந்தனைச் சாற்று ... (திருக்)

சரணங்கள்

பட்டரும் எழுபாணான் கென்னுமாரியர்களும்
பரிந்துதரும் பரிசு பெற்றார் - நல்ல
சிட்டர் பணியுமொன்பான் திருப்பதிகளை மீட்டெத்
திவ்விய தேசத்தினும்பே றுற்றார் ...

சுண்ணாம்பு காளவாயில் நின்றெங்கள் தலமென்றே
சிறந்த சத்தியம்பல செய்தார் - மிக்க
மண்ணாந்தைகளைப் போலே மயங்க மதவாதிகள்
மர்மவஞ்சகமெல்லாங் கொய்தார் (திருக்)

அண்டமுண்டவன் கோயில் தன்னிற்சிவனைவைத்த
தறிந்து திருக்கோவலூர் சென்றார் - நீல
கண்டன் கீழுரிற்செல்லப் புல்லைக் காட்டி நந்தியைக்
கடுக நடக்கவாது வென்றார் ... (திருக்)

கனவிலெழுந்தருளிக் கணக்கிலாமக்கட்கெல்லாம்
கனலாழி சங்கத்தைத் தரித்தார் - இந்த
நனவில் படுத்துயரம் நலிந்து துரியபதம்
நண்ணவென் றருள்நிலை தரித்தார் ... (திருக்)

முன்னாளெனைப்பவத்தில் மூட்டிய ஆணவப்பேய்
முறியக் கருணைதனைக் கொடுத்தார் - நீங்கா
எந்நாளும் புகழோங்கத் தவமூனறினைக் காட்டி
ராமாநுஜதாசப்பேர் கொடுத்தார் ... (திருக்)

திருவேங்கட ராமாநுஜாசாரியர் திருவடிகளே சரணம்

## 4. திருக்கோவலூர் ஸ்ரீத்ரிவிக்ரம ஸ்வாமி ஸன்னதி

1. நடுநாட்டுத் திருப்பதிகள் இரண்டில் ஒன்று.
2. பஞ்ச கிருஷ்ணாரண்ய க்ஷேத்திரங்களுள் ஒன்று.
3. கோபாலபுரம் மற்றும் கோபகிரி என்ற பெயர்களும் உண்டு.
4. திவ்யபிரபந்தம் எனப்படும் திராவிட வேதம் இங்குதான் முதன் முதலில் முதலாழ்வார்களால் பாடப்பட்டதால் இந்த திவ்யதேசத்திற்கு திவ்ய பிரபந்த அவதாரஸ்தலம் எனப் புகழ் பெற்றது.
5. ஆழ்வார்கள் திருக்கோவலூர் என மங்களாசாஸனம் செய்து உள்ளனர்.
6. விஸ்வகர்மாவினால் நிர்மானிக்கப்பட்ட க்ஷேத்திரம்.
7. பாத்ம புராணம் ஸ்தல மகிமையை விரிவாக எடுத்துரைக்கிறது.
8. பெருமாள் திருநாமம்: மூலவர் ஸ்ரீத்ரிவிக்ரமன், உத்ஸவர் ஸ்ரீ தேஹளீசன்
9. தாயார் திருநாமம்: மூலவர் பூங்கோவல் நாச்சியார், உத்ஸவர் ஸ்ரீ புஷ்பவல்லித் தாயார்
10. இந்த ஸன்னதி வைகானஸ ஆகம முறைப்படி திருவாராதனம் நடைபெறுகிறது.
11. ஆழ்வார்கள் மங்களா சாஸனம்: முதலாழ்வார்கள் எனப்படும் பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் மற்றும் திருமங்கையாழ்வார் ஆகியோர் மங்களாசாஸனம் செய்துள்ளனர்.
12. முதலாழ்வார்கள் முக்தியடைந்த ஸ்தலம்.
13. அவதார மகிமை: ம்ருகண்டு மகரிஷிக்கு பெருமாள் த்ரிவிக்ரமனாகக் காட்சியளித்த ஸ்தலம். உவகையோடு கூடிய திருமுகம், இடது கையில் சக்கரம், வலது கையில் சங்கம், நீலமேகத்திருமேனி, திவ்ய பீதாம்பரம், மார்பில் ஸ்ரீவத்ஸம், கண்டத்தில் கௌஸ்துபம், காதுகளில் மகரகுண்டலங்கள், கமலக் கண்கள், ப்ரும்மலோகம் வரை அளக்கப் பட்ட வலது திருவடி, உலகளந்த மற்றொரு திருவடி, வைஜயந்தி வனமாலை, ப்ருஹலாதன், மஹாபலி, சுக்ராசாரியார், முப்பத்து முக்கோடி தேவர்கள், மஹரிஷிகள், அனந்த கருட விஷ்வக் சேனாதிபதிகளுடன் எம்பெருமான் ஆச்ரமத்தில் நித்யவாஸம் செய்கிறார்.



14. ஸ்தலவிருக்ஷம்: புன்னைமரம்
15. விமானம்: ஸ்ரீகரவிமானத்தின் கீழ் பெருமாள் த்ரிவிக்ரமனாக ஸேவை சாதிக்கிறார்.
16. தாயார் ஸ்ரீ பூங்கோவல் நாச்சியார் கருணையே வடிவானவள், வரப்பிரஸாதி, திருமங்கையாழ்வார் மங்கசாஸாஸனம் செய்து உள்ளார். இவர் அஷ்டலக்ஷ்மியில் ஒருவர்.
17. வாமனர்: வாமனருக்கு இங்கு தனி ஸன்னதி உள்ளது. ஒவ்வொரு மாதமும் திருவோண நக்ஷத்திரத்தில் சிறப்பு ஆராதனை செய்யப் படுகிறது.
18. ஸ்ரீவிஷ்ணு துர்க்கை: ஸ்ரீ விஷ்ணுதுர்க்கை ஸன்னதி இங்குதான் பெருமாளுக்கு பக்கத்திலேயே உள்ளது. பெருமாளுக்கு காவல் தெய்வமாக இருப்பதாக ஐதீகம். "கற்புடைய மடக்கன்னி காவல் பூண்ட" என திருமங்கையாழ்வார் மங்களாஸாஸனம் செய்துள்ளார்.
19. ஸ்ரீ லக்ஷ்மி வராஹன் ஸன்னதி: இத்திருக்கோவிலில் லக்ஷ்மி வராஹனுக்கு தனிக்கோயில் உள்ளது சிறப்பாக கருதப்படுகிறது.
20. ஸ்ரீ சக்கரத்தாழ்வார் ஸன்னதி, தாயார் சன்னதிக்கு முன்பாக சுதர்ஸனாழ்வார் 16 திருக்கைகளுடன் ஸேவை சாதிக்கிறார். முன்புறம் ஸ்ரீ சுதர்ஸனாழ்வார் பின்புறம் யோக நரஸிம்மராக ஸேவை சாதிக்கிறார்.
21. ஸ்ரீ த்ரிவிக்ரம ஸ்வாமி ஸன்னதி பிரகாரத்தில் ஸ்ரீலக்ஷ்மி நாராயணன், ஸ்ரீலக்ஷ்மி நரஸிம்ஹன், ஸ்ரீஉடையவர், ஸ்ரீஆண்டாள், ஸ்ரீ மணவாளமாமுனிகள் மற்றும் ஸ்ரீ வேணுகோபாலன், ஆகியோருக்கு தனித்தனி ஸன்னதிகள் உள்ளன.
22. கோவில் வரலாறு: இத்திருக்கோயில் சுமார் 5 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ளது. இத்திருக்கோயில் பல்லவ மற்றும் விஜயநகர அரசர்களால் சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்பாக பலகாலங்களில்

கட்டப் பட்டுள்ளது. இத்திருக்கோவிலில் உள்ள மூன்று கோபுரங்களில் பெரிய கோபுரம் 192அடி உயரமுள்ளது மிகவும் பிரசித்தி பெற்றதாகும்.

23. தோஷநிவர்த்தி: இந்த ஸன்னதியில் பெருமாள், கருடன் சேஷன், அனந்தன் மற்றும் வாசுகியுடன் எழுந்தருளி ஸேவை சாதிப்பதால் இந்த பெருமாளை ஒரு மண்டலம் 48 நாட்கள் நெய்விளக்கேற்றி ப்ரதக்ஷிணம் செய்தால் ஸகல நாக தோஷங்களும் நிவர்த்தியாகும். ஸ்ரீ விஷ்ணு துர்க்கையை செவ்வாய் மற்றும் வெள்ளிக் கிழமையில் ராகு காலங்களில் நெய்விளக்கேற்றி வழிபட்டுவது ஸகல விதமான தோஷங்களும் நிவர்த்தி எனக் கருதப்படுகிறது.

24. தீர்த்த மகிமை: இந்த கிருஷ்ணாரண்ய க்ஷேத்திரத்தில் பல தீர்த்தங்களுள்ளன. இதில் ஸன்னதியின் வடதிசையில் ஓடும் கிருஷ்ணா பத்ரா எனப்படும் பெண்ணையாறு மிகவும் பிரசித்தி பெற்றதாகும். பிரம்மா கங்கையைக் கலசத்தில் எடுத்து உலகளந்தானை ஆராதித்தார். பகவானின் அந்த ஸ்ரீ பாததீர்த்தமே பெண்ணையாறாகப் பெருகியது.

25. பலன்கள்: நீராட்டம் செய்தால் பரமபதம், கரையில் தரிசனம் செய்தால் ரோகநிவர்த்தி, கையால் தொட்டால் பாபநிவர்த்தி, பருகினால் - ஸகலமனோரதம் நிறைவேறுவது.


26. இந்த ஸன்னதி ஸ்ரீமத் எம்பெருமானார் ஜீயர் ஸ்வாமியின் நிர்வாகத்தில் நடைபெறுகிறது.

27. ஸ்ரீ உ.வே. தி. ரங்கராஜஅய்யங்கார் ஸ்வாமி, தேவஸ்தானம் & மடம் பவர் ஏஜண்ட்.





ஸ்ரீமத் எம்பெருமானார் ஜீயர் மடம் - திருக்கோவலூர்



ஸ்ரீமத் எம்பெருமானார் ஜீயர் ஸ்வாமிகள் - திருவரசு
திருக்கோவலூர்

அருணா டிஜிடல்ஸ் - சிதம். © : 9842040710